Registered as a News paper பக்கங்கள் - 08 விலை - ரூபா 07

# ஈழநாதம்

Eezhanatham

மட்டக்களப்பு பதிப்பு மக்கள் நாளிதழ்

நாதம் 01 திருவள்ளுவர் ஆண்டு 2035 ஐப்பசி 09 25.10.2004 திங்கட்கிழமை ஓசை 149

உங்கள் வியாபாரம் சிறக்க ஈழநாதத்தில் விளம்பரம் செய்யுங்கள்.

பிரதான வீதி,
கொக்கட்டிச்சோலை.
தொலைபேசி:- 065-2226110
065-2226303

## மருதமுனை மத்திய கல்லூரி மாணவன் பள்ளிவாயல் வளாகத்தில் சடலமாக மீட்பு!

(ஜெஸ்மி.எம்.மூசா)

மருதமுனை மத்திய கல்லூரியில் தரம் 10ல் கல்வி பயிலும் முகமது முபாரக் அப்துல்பாரி நேற்று சனிக்கிழமை காலை 10 மணியளவில் சடலமாக மீட்கப்பட்டார்.

இது பற்றி கொலை செய்யப்பட்டவரின் சகோதரரான முகமட் சிராச் (25) என்பவரிடம் கேட்ட போது நோன்பு விடுமுறை காலமாதலால் நோன்பு பிடித்து விட்டு காலையில் மசூர் முகமது விளையாட்டரங்கிற்கு விளையாடச் செல்வது வழக்கம் அவ்வாறே அன்றும் காலையில் அவர் சென்றிருந்தார்.

6.20 மணியளவில் வீட்டிற்கு அருகாமையில் இருக்கும் விளையாட்டு அரங்கிற்கு பக்கத்துப் பள்ளி வாயல் வளாகத்தில் சடலம் ஒன்று கிடப்பதாக கூறி அயலில் உள்ளவர்கள் சென்றனர்.

அப்போது நானும் சென்று பார்த்த போது தலையில் பின் பகுதி

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## புதிதாக பதவி ஏற்கவுள்ள கண்காணிப்பு குழு அதிகாரி மட்டு மாவட்டத்திற்கு விஜயம்

(நமது நிருபர்)

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய பிரதம அதிகாரியாக பதவியேற்கவிருக்கும் ஜி.என்.வோன் வின்கில் நேற்று மட்டக்களப்புக்கான விஜயமொன்றை மேற்கொண்டார்.

கிழக்கு மாகாணத்தில் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக நேற்று அம்பாறைக்கான விஜயத்தை முடித்துக் கொண்ட இவர் நேற்று மட்டக்களப்புக்கான விஜயத்தின் போது போர் நிறுத்தக் கண்காணிப்பு அலுவலகத்தில், மற்றும் உள்நாட்டு கண்காணிப்பாளர்களை சந்தித்து உரையாடிய பின் 233ம் படைப் பிரிவு தலையகத்தில் இராணுவ கட்டளை அதிகாரி கேணல் எல்.ஆர். அமரதுங்கவையும் சந்தித்தார்.

இந்தச் சந்திப்புக்களின் பின்பு கொக்கட்டிச்சோலைக்கு வருகை தந்த வோன் வின்கில் மாவட்டச் செயலகத்தில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் தயாமோகனைச் சந்தித்து உரையாடினார்.

இச்சந்திப்பு தொடர்பாக

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

# சிறிலங்கா - இந்தியா படைத்துறை ஒப்பந்தம் தமிழ் மக்களுக்கு சந்தேகத்தைக் கிளப்பியுள்ளது!



## தமிழீழ அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(நமது நிருபர்)

**சிறிலங்கா அரசும், இந்தியாவும் படைத்துறை ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஒன்றைசெய்து கொள்ளவிருப்பது தமிழ் மக்கள் மத்தியில் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.**

இவ்வாறு தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் தெரிவித்தார்.

ஐரோப்பிய நாடுகளுக்கான பயணத்தை மேற்கொண்ட விடுதலைப்புலிகளின் உயர்மட்ட குழுவினர் சுவிற்சலாந்து சென்றிரு

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## ஜனாதிபதி ஒரு புரியாத புதிர் ஜோசப் பரராசசிங்கம் கூறுகிறார்

(நமது நிருபர்)

ஜனாதிபதியின் நிலைப்பாடு ஒரு புரியாத புதிராகவேயுள் ளது. இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உப தலைவரும், தேசியப் பட்டியல் நாடா ளுமன்ற உறுப்பினருமான ஜோசப்பரராசசிங்கம்.

நேற்றுக் தொலைக்காட்சி நிகழ்சி ஒன்றில் கலந்து கொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில் ஜனாதிபதியின் நிலைப்பாட்டைத் தற்போது அறிந்து கொள்ள முடியாது உள்ளது என்றார்.

ஒரு தடவை சமாதானப் பேச்சை ஆரம்பிக்கப்போகின்றேன் என்கிறார் மறு தடவை இழுத்தடி த்துக் கொண்டே வருகின்றார். இத்தகைய நிலையில் அடுத்த கட்டம் என்ன செய்வார் என்பது விள ங்கவில்லை எனவும் கூறினார்.

## சகல சமூகங்களுடனும் இணைந்து முஸ்லிம்களுக்காக குரல் கொடுப்போம்

## அமைச்சர் பேரியல்

(ஏ.எல்.எம்.சலீம்)

''சகல சமூகங்களுடனும் சேர்ந்து செயற்படவே நாம் தயாராக உள்ளோம். அதேவேளை முஸ்லிம்களின் உரிமைகளுக்காக குரல் கொடுப்பதற்கும் எந்த வேளையிலும் தயாராகவேயுள்ளோம்".

இவ்வாறு தேசிய ஐக்கிய முன்னணியின் (நுஆ) தலைவியும், அமைச்சருமான பேரியல் அஷ்ரப் கூறினார்.

நிந்தவூர் அட்டப்பள்ளம் ஸக்கலத் கிராம வீடமைப்புத் திட்ட திறப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் எம்.என்.ஜுனைத் தலைமையில் திறப்பு விழாப் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

இத்திறப்பு விழாவில் ஊடகத்துறைப் பிரதி அமைச்சர் எம்.எச். சேகு இஸதீன் கௌரவ அதிதியாகக்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## மட்டு.அம்பாறை மாவட்டங்களில் திங்கள், வியாழன் மின்சாரத் தடை!

(அக்கரைப்பற்று நிருபர்)

மட்டக்களப்பு, அம்பாறை, கல்முனை ஆகிய மின்சார பொறியியலாளர் பிரிவிற்கு உட்பட்ட பிரதேசங்களில் இன்று திங்கட்கிழமையும், எதிர்வரும் வியாழக்கிழமையும் மின்சார விநியோகம் தடைப்படும் என கல்முனை மாவட்ட மின்சார பொறியலாளர் எஸ் மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பொறியியலாளர் பிரிவிற்குட்பட்ட மண்டூர்,

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## கைத்துப்பாக்கிளுடன் வென்னப்புவவில் இரு இளைஞர்கள் கைது!

(நமது நிருபர்)

வென்னப்புவ பொலிசாருக்கு கிடைத்த தகவலொன்றின் பேரில் இந்த கைத்துப்பாக்கிகளையும் அதற்கான ரவைகளையும் பொலிசார் கண்டெடுத்துள்ளனர். இலங்கைக்கு உல்லாசப் பயணியாக வந்த இத்தாலியப் பிரஜையொருவரிடம் இதனைத் தாங்கள் பெற்றுக் கொண்டதாக இந்த இளைஞர்கள் தெரிவித்துள்ளார்கள்.

சிலாபம் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் எதிர்வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

இதேவேளை, வவுனியா - கொழும்பு தொடரூந்தில் பயணிகளிடம் தங்க ஆபரணங்கள் கொள்ளையடித்து வந்த கொள்ளைக் கோஷ்டியினரை அனுராதபுரம் தம்பத்தேகம பொலிசார் நேற்று கைது செய்துள்ளனர்.

இவர்களில் இருவர் இளம் பெண்கள் எனவும், கொள்ளையடிக்கப்பட்ட தங்க நகைகளின் ஒரு பகுதியும் இவர்களின் பாவனையிலி

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## கதிரொளி சிறுவர் இல்லத்தில் சிறுவர்தின, முதியோர் வார நிகழ்வு

(தனஞ்ஷயன்)

பட்டிப்பளை பிரதேச செயலகமும் கொக்கட்டிச்சோலை கதிரொளி சிறுவர் இல்லமும் இணைந்து நடாத்திய சர்வதேச சிறுவர் தினமும் முதியோர் வாரமும் நிகழ்வு நேற்று பி.ப.2.00 மணியளவில் கதிரொளி சிறுவர் இல்லத் தலைவர் தெ. முருகமூர்த்தி தலைமையில் கதிரொளி சிறுவர் இல்ல வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான க.தங்கேஸ்வரி த.கனகசபையும் கலந்து கொண்டனர். கௌரவ அதி திகளாக தமி ழர் புனர்வாழ்வுக் கழக பணிப்பாளர் கு.தேவராஜா, தான் தோன்றீஸ்வரர் ஆலய வண்ணக்கர், க. ஆறுமுகம், கொக்கட்டிச்சோலை, இ.கி.மி. வித்தி யாலய அதிபர் பொ. நேசதுரை முதலைக்குடா மகா வித்தியாலய அதிபர் எஸ். சின்னத்தம்பி போடி, மகிழடித்தீவு சரஸ்வதி

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## இன்றைய நாளில்

### தகவற்துளி

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும், சிங்களப் பேரினவாதத்தின் மூத்த தலைவர்களில் ஒருவருமான காமினி திசாநாயக்கா மனிதக் குண்டுத் தாக்குதலொன்றில் கொல்லப்பட்ட நாள் (1994)

---

பண்டாரவளை, பிந்துனுவெவ சிறைகள் மீது சிங்கள பொலிசாரும், காடையர்களும் நடத்திய தாக்குத லில் 31 அப்பாவி தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர். (2002)

# செய்தித் துளிகள்

## காணிப் பிரச்சினை தொடர்பான மாநாடு

(விரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட காணிப் பிரச்சினையைத் தீர்த்தல் தொடர்பான சகவாழ்வு மன்றத்தின் மாவட்ட ஆலோசனை சபை மாநாடு சனி, ஞாயிறு ஆகிய இரு நாட்களும் அம்பாறையில் நடைபெற்றது.

மாவட்ட ஆலோசனைக் குழுவில் 05 உபகுழுக்கள் இம்மாநாட்டில் தெரிவு செய்யப்பட்டதாக சகவாழ்வு மன்ற மாவட்ட இணைப்பாளர் ஐ.எம்.இப்றாகிம் தெரிவித்தார்.

சகவாழ்வு மன்றத்தின் அம்பாறை நகர தலைமையகத்தில் இவ் இருநாள் மாநாடு நடைபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

## காணவில்லை!

(நமது நிருபர்)

வெல்லாவெளியைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை பேரின்பராசா என்பவரது தேசிய அடையாள அட்டை காணாமல் போய் விட்டது. அத்துடன் சிறுகுறிப்பு புத்தகம், மற்றும் சில முக்கிய ஆவணங்களும் தொலைந்துள்ளன. இவற்றை கண்டெடுப்பவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

## குருவும் சீடர்களும் சிறுவர் கவிதை நூல் வெளியீடு

(விரி.சகாதேவராஜா)

அக்கரைப்பற்று மணிக்கவிராயர் என்.மணிவாசகன் எழுதிய ''குருவும் சீடர்களும்'' என்ற சிறுவர் கவிதைகள் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

நூலாசிரியரின் 05வது நூல் இதுவாகும். ஏலவே மணிவாசகன் அறுவடை, மணிக்கவிகள், சமாதானக்குரல், புதுக்குரல் ஆகிய 04 கவிதை நூல்களை தயாரித்து வெளியிட்டுள்ளார். அக்கரைப்பற்றின் பாரிய அரசசார்ப ற்ற நிறுவனமான ''மகா சக்தி'' எனும் சமூக சேவை நிறுவனத்தின் தலைவரான நோ.ம ணிவாசகன் சிறந்த சமூக சேவையாளனு மாவார்.

## இந்து இளைஞர் மன்றத்தின் நவராத்திரி விழா

(சசி)

முனைக்காடு இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில், சித்திவிநாயகர் ஆலயத்தில் நவராத்திரி விழா ஒன்பது நாட்களும் மிகவும் சிறப்பாக நடந்தேறியது.

கடந்த 14ம் திகதி ஆரம்பமான நவராத்திரி விழாவில் தொடர்ந்து ஒன்பது நாட்களும் விஷேட பூசைகள் நடைபெற்று பத்தாம் நாளான விஜயதசமியன்று ஏடு தொடக்கும் வைபவமும், விஷேட பூசை ஆராதனைகளும் நடைபெற்று, இறுதியில் தீர்த் தோற்சவத்துடன் இனிதே நிறைவு பெற்றது.

## மண் அகழ் வதற்குத் தடை!

(சசி)

பட்டிப்பளை பிரதேச சபைக்குட்பட்ட கொக்கட்டிச்சோலை, முனைக்காடு, முதலைக்குடா ஆகிய கிராமங்களுக்குச் சொந்தமான மயானத்தில் மண் அகழ்வது கிராமிய அபிவிருத்தி ஒன்றியத்தினால் தடை செய்யப்பட்டுள்ளது. மண்ணகழ்வு தொடர்ந்து இடம் பெற்றுவருவதனால் எதிர் காலத்தில் பிரே தங்களை அடக்கம் செய்வது சிரமமாக இருக்கும். குறிப்பாக மழை காலங்களில் மக்கள் இச்சிரமத்தினை எதிர் கொள்ள நேரிடும் என்ற காரணத்தினால், முன்னெச்சரிக்கையாக இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

## ஆறுமுகத்துக்குப் பதவி

(நமது நிருபர்)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் சிவில் விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சராக நியமிக்கப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. சிறிலங்கா ஜனாதிபதிக்கும், ஆறுமுகம் தொண்டமானுக்கும் இடையில் கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளை அடுத்தே, இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

# சிறிலங்கா, இந்தி யபடைத் துறை ஒப்பந்தம் தமிழீழ மக்கள் நலன்களை வெகுவாகப் பாதிக்கும்

## அரசியல் ஆய்வாளர்கள் கருத்து

(நமது நிருபர்)

**இந்தியாவுக்கும், சிறிலங்கா அரசுக்கும் இடையில் செய்து கொள்ளப்படவுள்ள படைத்துறை ஒத்துழைப்பு ஒப்பந்தம் தமிழீழ மக்களின் நலன்களுக்கு பாதகமாக அமையலாம் என அரசியல் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.**



நோர்வேயின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளுக்கும் இப்படைத்துறை ஒப்பந்தம் பங்கம் விளைவிக்கலாம் எனவும் இவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த ஒப்பந்தத்துக்கான வரைபை முழுமை செய்யும் நோக்குடன் சமீபத்தில் கொழும்புக்கு விஜயம் செய்திருந்த இந்திய படைத்துறையின் உயரதிகாரிகள் கடந்த வியாழன் புதுடில்லி திரும்பியுள்ளனர்.

இந்த ஒப்பந்தம் விரைவில் செய்து கொள்ளப்பட வேண்டும் என்பதில் சிறிலங்கா அரசும், சிங்களப் பேரினவாத சக்திகளும அதிதீவிர கரிசனை காட்டி வருகின்றன.

இதனை வலியுறுத்தும் முகமாக சிறிலங்கா ஜனாதிபதி அடுத்த மாத முற்பகுதியில் புதுடில்லி சென்று இந்தியத் தலைவர்களுடன் முக்கிய பேச்சுவார்த்தைகளை நடாத்தவுள்ளார்.

இந்தியாவுடன் படைத்துறை ஒப்பந்தம் செய்து கொள்ளும் திட்டத்திற்கு சிறிலங்காவின் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வித்திட்டிருந்தார்.

இவர் கடந்த ஒக்டோபர் மாதம் இந்தியப் பிரதமர் வாஜ்பாயைச் சந்தித்ததை அடுத்து வெளியிட்ட கூட்டறிக்கையில் இந்த ஒப்பந்தம் தொடர்பான தகவல் வெளிப்படையாக அறிவிக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் போர் வலுவைக் கட்டுப்படுத்தி, அரசியல் அழுத்தம் கொடுக்கும் நோக்குடன் ஐக்கிய தேசிய முன்னணி அரசு கட்டியெழுப்ப முனைந்த சர்வதேச வலைப் பின்னலின் ஒரு முக்கிய அம்சமாகவே, இந்தியாவுடன் ஒரு படைத்துறை ஒப்பந்தத்தைச் செய்து கொள்ள ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதன் பின்னர் இவ்விரு நாடுகளிலும் ஆட்சி மாற்றம் நிகழ்ந்த போதும், இந்த ஒப்பந்தத்தை முழுமை பெறச் செய்யும் முயற்சியில் இரு அரசுகளும் தீவிர கரிசனை காட்டி வருகின்றன.

இந்த ஒப்பந்தம் சம்பந்தமான அதிகாரபூர்வமான தகவல்கள் வெளியானதை அடுத்து, இந்த ஒப்பந்தத்திற்கு எதிராக தமிழீழ விடுதலைப் புலிகள் கடுமையான ஆட்சேபத்தை தெரிவித்திருந்தனர்.

இந்த உத்தேச ஒப்பந்தமானது தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு குந்தகமாக அமையுமென தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசியருமான அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

ஒரு வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்கான அச்சுறுத்தல் ஏதுமற்ற சூழ்நிலையில், போருக்கு ஓய்வுகொடுத்து சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் சூழ்நிலையில் இந்தியாவும், சிறிலங்கா அரசும் படைத்துறை சம்பந்தமான ஒப்பந்தம் செய்து கொள்ள முனைவது தமிழ் மக்களின் மத்தியில் சந்தேகத்தையும், விசனத்தையும் ஏற்படுத்தியிருப்பதாக அன்ரன் பாலசிங்கம் கூறியிருந்தார்.

சமாதான முன்னெடுப்புக்களுக்கு ஆதாரமாக விளங்குவது போர் நிறுத்த ஒப்பந்தம். இந்தப் போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு அத்திவாரமாக விளங்குவது சிறிலங்காப் படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் மத்தியில் நிலவும் படைவலுச் சமநிலை.

இந்தியாவுடனான படைத்துறை ஒப்பந்தமானது சிறிலங்காப் படையீனரின் படைவலுவை உயர்த்திவிடும் என்பதால், அது விடுதலைப் புலிகளுக்கு பாதகமான முறையில் படைவலுச் சமநிலையை பெரும் பாதிப்புக்கு உள்ளாக்கும் என அன்ரன் பாலசிங்கம் விளக்கினார்.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டால் சிங்கள அதிகார வர்க்கம் கடும்போக்கைக் கடைப்பிடிக்கும். இந்திய வல்லரசு தமக்குப் பக்கபலமாக நிற்பதாக எண்ணி சிங்கள இனவாத சக்திகள் இறுமாப்புக் கொள்ளும். இப்போக்கினால் சமாதான முயற்சிகள் தடைப்படும். மீண்டும் போருக்கான சூழ்நிலை உருவாகலாம் என அன்ரன் பாலசிங்கம் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், சிறிலங்காவுக்கும், இந்தியாவுக்கும் இடையில் செய்து கொள்ளப்படவுள்ள படைத்துறை ஒத்துழைப்பு ஒப்பந்தம் பல அதிகார மட்டத் தடைகளைத் தாண்ட வேண்டியிருக்கும் என்று ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். எனினும்,



இந்த ஒப்பந்தம் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பினரும், தமிழ் நாட்டிலுள்ள ஈழத்தமிழர் சார்புக் கட்சிகளும் காட்டிவரும் எதிர்ப்புக்கள் காரணமாக வே இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாவது மேலும் காலதாமதமா கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, ஈழத்தமிழரின் தேசிய சுதந்திரப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கி வரும் ம.தி.மு.க. இந்த ஒப்பந்தத்திற்கு கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது. ம.தி.மு.க.வின் பொதுச் செயலாளர் வைகோ, இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங்கைச் சந்தித்து இந்த ஒப்பந்தம் ஈழத்தமிழ் மக்களின் நலன்களுக்கு பாதகமாக அமையுமென சுட்டிக்காட்டியுள்ளார். இதே போன்று தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ.நெடுமாறனும் இந்த ஒப்பந்தத்திற்கு கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஈழத்தழிழருக்கு ஆதரவு தெரிவித்து வரும் கட்சிகளான தி.மு.க., பாட்டாளி மக்கள் கட்சி போன்ற கட்சிகள் இந்த ஒப்பந்தம் குறித்து எத்தகைய நிலைப்பாட்டை வெளியிடுமோ என்ற கேள்வி இப்போது எழுப்பப்பட்டுள்ளன.

இந்தியாவின் மத்திய காங்கிரஸ் கூட்டரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இக்கட்சிகள், இந்த ஒப்பந்தத்தால் ஈழத் தமிழ் மக்கள் பாதிப்புக்குள்ளாவார்கள் என்று கருதி எதிர்ப்புத் தெரிவித்தால், ஒப்பந்தம் கைச்சாத்தாவது தாமதப்படுத்தப்படும் எனக் கருதப்படுகின்றது.

# அடுத்தவருடம் சர்வஜன வாக்கெடுப்பு ஜனாதிபதி தயாராகிறாரராம்

(நமது நிருபர்)

அடுத்த வருட முற்பகுதியில் அரசியல் யாப்பு திருத்தத்திற்காக சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்துவதற்கு சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தயாராகி வருகின்றார்.

இது தொடர்பாக திரைக்குப் பின்னால் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. தற்போதைய அரசியல் யாப்பின்படி நிறைவேற்று அதிகார முள்ள ஜனாதிபதி பதவியை ஒருவர் இரண்டு தடவைகளுக்கு மேல் வகிக்க முடியாது. (பதவிக்காலம் 2005 நவம்பருடன் முடிவடைகின்றது)

இதனை மேலும் ஒரு 6 வருடத்திற்கு நீடிப்பது அல்லது நிறைவேற்று அதிகாரமுள்ள பிரதமர் முறையை கொண்டு வருவது ஆகியவற்ற அடிப்படையாகக் கொண்டே உத்தேச அரசியல் யாப்பு திருத்தத்தை கொண்டுவர அவர் தயாராகி வருகின்றார்.

அரசியல் யாப்பில் திருத்தம் கொண்டு வருவதெனில், பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை (150 பேரின் ஆதரவு). ஆனால் இது அவரால் நினைத்துக் கூட பார்க்க முடியாத நிலை.

இந்த நிலையில் அரசியல் யாப்பு நிர்ணய சபையொன்றை ஏற்படுத்தி அதன்மூலம் தனது இலக்கை அடைவதற்கு சர்வஜன வாக்கெடுப்பை அவர் நடத்த தயாராகி வருகின்றார்.

இப்படியொரு சர்வஜன வாக்கெடுப்பு நடைபெறுமானால் வீதியில் இறங்கி மக்கள் போராடுவார்கள் என ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு அக்கரைப்பற்று இராம கிருஷ்ண மிஷன் வித்தியாலய மாணவர்கள், ஆசியரை கௌரவிக்கும் நிகழ்வு வித்தியாலய விபுலானந்தர் மணி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதில் அதிதிகளாகக் கலந்து கொண்ட வித்தியாலய அதிபர் கே.லோகிதராஜா மங்கள விளக்கு ஏற்றுவதையும், பிரதி அதிபர் கிருபைராஜா உரையாற்றுவதையும், இதில் கலந்து கொண்ட மாணவர்களில் ஒருபகுதினரையும் காணலாம். (படமும், தகவலும்:- சரவணன்)

# சர்வஜன வாக்கெடுப்பு நடக்கப் போகிறது சந்திரிகாவுக்கு வாக்களியுங்கள்

**- பட்டதாரிகளிடம் அன்வர் இஸ்மாயில் கோரிக்கை -**

(விரி.சகாதேவராஜா)

அரசியலில் விரைவில் பாரிய மாற்றம் இடம் பெறவிருக்கின்றது. அதன் ஒரு அங்கமாக சர்வஜன வாக்கெடுப்புத் தேர்தல் நடைபெறவுள்ளது. அந்தத் தேர்தலில் ஜனாதிபதி சந்திரிகா பாண்டார நாயக்க குமாரதுங்கவிற்கு வாக்களித்து மீண்டும் அவரை ஜனாதிபதியாக்குங்கள் இவ்வாறு அம்பாறை மாவட்ட பட்டதாரிகளுக்கு நியமனத்தை வழங்கி வைத்துப் பேசிய கிழக்கு உட்கட்டமைப்புப் பிரதியமைச்சர் எம்.ஐ.அன்வர் இஸ்மாயில் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் தேர்தல் வாக்குறுதியின் படி இரண்டாம் கட்ட பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்ட பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் வைபவம் வியாழனன்று சம்மாந்துறை நகர மண்டபத்தில் நடைபெற்றது.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எம்.எம்.நசீர் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது. அங்கு 589 தமிழ் மொழி மூல பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டது.

சிங்கள மொழி மூல பட்டதாரிகள் 147 பேருக்கு நியமனம் வழங்கும் வைபவம் ஏக காலத்தில் அம்பாறை நகர மண்டபத்தில் ஜே.வி.பி: எம்.பி. வசந்த பியதிஸ்ஸ முன்னிலையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

சம்மாந்துறை வைபவத்தில் பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் மேலும் பேசுகையில்: ''எதிர்வரும் சர்வஜனவாக்கெடுப்பின் போது அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச மக்கள் சுமார் 2 லட்சம் வாக்குகளை ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு அளிக்க வேண்டும். 42 ஆயிரம் பட்டதாரிகளுக்கு அரச தொழில் வழங்கிய ஜனாதிபதி சந்திரிகா அம்மையாருக்கு நன் றி செலுத்தும் பொருட்டு நாம் அவருக்கு வாக்களிக்க வேண்டும் என்றார்.

# துரோகி கருணாவுக்கு எதிராக அம்பாறையிலும் சுலோகங்கள்

(அ.தர்மா)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட துரோகி கருணாவிற்கு எதிரான வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகளும், துண்டுப் பிரசுரங்களும் அம்பாறை மாவட்டத்தில் காணப்பட்டன. அத்துடன் பாதைகளிலும், சுவர்களிலும் கரிகளினாலும் வெண்கட்டிகளினாலும், பெயின்ற் வகைகளினாலும் எழுதப்பட்டும் காணப்பட்டது. கல்முனைப் பிரதேசங்களிலுள்ள அனைத்துக் கிராமங்களிலும் கருணாவுக்கு எதிரான துண்டுப்பிரசுரங்கள் வாசகர்கள் மூலம் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளன.

கருணாவின் பூதவுடலையும் இங்கேவர விடமாட்டோம், சிங்களவனின் எச்சியைத் தின்னும் கருணா தமிழனுக்கு உரிமை பெற்றுத்தருவானா?, பெண் பித்தன் கருணாவுக்கு மண்பற்று இருக்குமா?, நீ கெட்ட கேட்டுக்கு கட்சியும் தேவையா?, தமிழனைக் காட்டிக் கொடுத்த ஈ.பி.டி.பி, ஈ.என்.டி.எல்.எப். உன் கட்சியின் நண்பர்களா?, கருணாவால் இந்த மண் கறைபட்டது போதும்., ஊனமுற்ற வீரர்களை மதிக்காமல் கொன்றவன் மாவீரரை மதிப்பானா., புலிகளே கருணாவை உடனே கொல்லுங்கள் எனவும் எழுதப்பட்டுக் காணப்பட்டது.

# கல்முனை தமிழ் பிரதேசத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்தும்; அபிவிருத்தியில்லை!

(அ.தர்மா)

கல்முனை தமிழ் பிரதேச செயலகப் பிரிவு அபிவிருத்திக்கென தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கனகசபை. பத்மநாதன் அவர்களின் வருடாந்த பன்முகப்படுத்த நிதியிலிருந்து 8லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதுவரை இந்நிதிக்கான அபிவிருத்தித் திட்டம் மேற்கொள்ளப்படாமல் இழுத்தடிப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

கல்முனை தமிழ் பிரதேச செயலகப் பிரிவு மிகவும் நீண்ட காலமாக அபிவிருத்தியின்றி புறக்கணிக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் ஒதுக்கப்பட்ட நிதிக்கான அபிவிருத்தித் திட்டம் மேற்கொள்ளாமல் காலத்தைக் கடத்துவது அதிகாரிகளின் கபட நாடகம் என இப்பிரதேச மக்கள் விசனம் கொண்டுள்ளனர். இந்நிதி செலவிடப்படாமல இருப்பதற்கு காரணம் என்ன? எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனம் எடுத்து பாராளுமன்ற உறுப்பினர்களால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை காலத்தை இழுத்தடிக்காமல் அபிவிருத்தித் திட்டத்தை மேற்கொள்ளுமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வேண்டு கோள் விடுக்கப்பட்டுள்ளது.

# மட் கல்வி அபிவிருத்தி சங்கம் நடாத்தும் பரிசளிப்பு விழா

(ஜீவராஜ்)

மட்டக்களப்பு கல்வி அபிவிருத்திச் சங்கம் நடாத்தும் மாணவர் கல்வி உயர் பெறுபேற்றுக்கான 2002,2003ம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் 30ம் திகதி சனிக்கிழமை மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர் இசைநடனக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சனிக்கிழமை காலை 09. 30 மணிக்கு ஆரம்பமாகும். இந்நிகழ்வில் பொதுப் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களைப் பாராட்டி பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம அதிதிகள், கௌரவ அதிதிகள், உரை என்பனவும் மாணவ மாணவியரின் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

# ஒரு பாடசாலையின் வளர்ச்சி அது சார்ந்த அமைப்புக்களிலும் தங்கியுள்ளது

**-பிரதேச கல்வி பணிப்பாளர் எஸ்.தில்லைநாதன்-**

(போரதீவு பற்று)

ஒரு பரீட்சையின் வளர்ச்சி என்பது அதிபர், ஆசிரியர்களுக்கும் அப்பால் அப்பாடசாலையைச் சார்ந்துள்ள அமைப்புக்களின் பங்களிப்பிலும் தங்கியுள்ளது.

இவ்வாறு பெரியபோரதீவு பாரதி வித்தியாலயத்தில் இடம் பெற்ற சாரணர் விருது வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போராதீவுப்பற்று பிரதேச கல்விப்பணிப்பாளர் திரு.எஸ். தில்லைநாதன் தெரிவித்தார். பாடசாலை அதிபர் திரு.த. சுந்தரலிங்கம் தலைமையில் இடம் பெற்ற இவ்விழாவில் தொடர்ந்து அவர் உரையாற்றும் போது எந்த விடயத்தையும் திட்டமிட்டுச் செயற்படுத்தும் போதுதான் அதுவெற்றி பெறுகின்றது. அதனை இப்பாடசாலையில் காணமுடிகின்றது. பாடசாலை ஒரு சனசமூக நிலையம் என தற்கால அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

அந்த அளவிற்கு சமூகத்தை இணைக்கின்ற ஒரு அமைப்பாக பாடசாலை விளங்குகின்றது. கல்வி மட்டும் இருந்து விட்டால் போதாது கல்வியினூடாக பண்புசார் விழுமியங்களும் விருத்தியடைய வேண்டும். சாரண மாணவர்கள் இங்கு சத்தியப் பிரமாணம் செய்யும் போது மகிழ்ச்சியாக இருந்தது. அச்சத்தியப் பிரமாணத்தின்படி செயற்பட்டு எல்லோருக்கும் நற்பெயரை ஈட்டிக் கொடுக்க வேண்டியது அவர்களின் பொறுப்பாகும் என்றார்.இந்நிகழ்வில் போரதீவுப் பற்று மாவட்ட உதவிச் சாரண ஆணையாளர் திரு.ஆ. புட்கரன் அவர்களும் கலந்து கொண்டார். சின்னங்களை உதவி சாரண ஆணையாளரும், பாரதி வித்தியாலய சாரண தலைவருமான திரு. கே.செல்வராஜா அணிவித்தார்.

## சுகாதார பரிசோதகர்களுக்கு இன்று விஷேட பயிற்சி வகுப்பு

(எஸ்.ரவீந்திரன்)

சுகாதார பரிசோதகர்களுக்கான பயிற்சி வகுப்பு இன்று திங்கட்கிழமை மட்டக்களப்பு பிராந்திய வைத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது. பொது சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் பயிற்சி நெறியை பிரதிமா காண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் டபிள்யூ.டபிள்யூ. வில்லியம் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

# தடை தாண்டல் பரீட்சை முடிவுகள் இழுத்தடிப்பு

(அ.தர்மா)

கடந்த 2003ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் கல்வியமைச்சினால் இலங்கை அதிபர் சேவை தடை தாண்டல் பரீட்சை நடாத்தப்பட்டது. இதுவரை அதன் முடிவுகள் வெளியிடப்பட்டு தகுதியானவர்களுக்கு பதவியுயர்வுகள் வழங்காமல் இழுத்தடிப்புச் செய்யப்பட்டு வருகின்றது. அதிபர்கள் தங்களது பதவியுயர்வுகளை பெற்றுக் கொள்ளும் நோக்கில் தடைதாண்டல் பரீட்சைக்கு தோற்றியும் பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்த வண்ணம் ஏமாற்றம் அடைந்து வருகின்றனர்.

இதனால் பாதிக்கப்பட்ட அதிபர்கள் தங்களது கவலையைத் தெரிவித்தனர். இந்நிலை தொடராமல் தடை தாண்டல் பரீட்சையின் முடிவுகளை மிக விரைவில் வெளியிட்டு பதவி உயர்வுகளை வழங்குமாறு கேட்டு கல்வியமைச்சின் உயர் அதிகாரிகளிடம் வேண்டு கோள் விடுத்துள்ளனர்.

# சபாநாயகர் பதவியை ஏற்க தம்மாலோக தேரர் மறுப்பு

(நமதுநிருபர்)

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் உடுவே தம்மாலோக தேரர், சிறிலங்கா நாடாளுமன்றத்தின் சபாநாயகர் பதவிக்கு போட்டியிடவுள்ளதாக வெளியான செய்திகளை அவர் மறுத்துள்ளார்.

தற்போதைய சபாநாயகரான டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டார மீது நம்பிக்கையில்லாப் பிரேணையைக் கொண்டு வந்து அவரை அப்பதவியிலிருந்து நீக்கிவிட்டு, உடுவே தம்மாலோக தேரரை சபாநாயகராக்குவதற்கு ஆளும் சுதந்திரக் கூட்டமைப்பு முயற்சித்து வருவதாக வெளியான செய்திகள் குறித்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசியல் யாப்பை மாற்றுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம், தமக்குச் சார்பான ஒருவர் நாடாளுமன்றச் சபாநாயகராக இருக்கவேண்டும் என்று விரும்புகிறது.

எனினும், சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் ஒருவரை அந்தப் பதவிக்கு போட்டியிடச் செய்து வெற்றியீட்டுவது சாத்தியமில்லை என்று கருதும் அரசாங்கம், ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த உடுவே தம்மாலோக தேரரை அப்பதவிக்குப் போட்டியிடச் செய்வதன் மூலம், அக்கட்சியினரின் ஆதரவைப் பெற்று, அவரைத் தமக்குச் சார்பானவராக மாற்றிக்கொள்ளலாம் என்று கருதுவதாகச் செய்திகள் வெளியாகியிருந்தன.

எனினும், இந்தச் செய்திகளை மறுத்துள்ள உடுவே தம்மாலோக தேரர், நாடாளுமன்றச் சபாநாயகராகும் எண்ணம் தமக்குத் துளியும் கிடையாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

# கொழும்பு வரும் அகாஷி வன்னி சென்று பேச்சு நடாத்துவார்

(நமது நிருபர்)

இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாசி கிளிநொச்சி சென்று விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்துவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பிலுள்ள ஜப்பானிய தூதரக வட்டாரங்கள் இதனை நேற்று முன்தினம் உறுதிப்படுத்தியுள்ளன.

இலங்கை வரும் ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி, சிறிலங்கா ஜனாதிபதி, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் உட்பட பல முக்கிய தலைவர்களையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளார். அத்துடன், வன்னி சென்று விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களையும் சந்தித்துப் பேசுவார்த்தை நடாத்துவார் என்று ஜப்பானியத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இச்சந்திப்புக்களின் போது, தடைப்பட்டுள்ள பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கச் செய்வது தொடர்பாகவே அவர் கூடுதல் கவனம் செலுத்துவார் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டு இந்தியா செல்லும் ஜப்பானியத் தூதுவர் யசூசி அகாஷி, இலங்கை சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலை குறித்து இந்தியத் தலைவர்களுடனும் கலந்துரையாடவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கல்வி மாணிப்பட்ட கற்கை நெறியின் இறுதிப்பரீட்சை

(அ.தர்மா)

கல்வி மாணிப்பட்ட கற்கை நெறியின் இரண்டாம் வருடத்திற்கான இறுதிப் பரீட்சை எதிர்வரும் 30ம், 31ம், 01ம், திகதிகளில் கல்முனை ம:.முத் பாலிகா மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு இக்கற்கை நெறியின் விரிவுரைகளும், பரீட்சைகளும் வவுனியா, கண்டி ஆகிய நிலையங்களிலே நடைபெற்று வந்தது.

தற்போதைய சமாதான சுமூகமான சூழ்நிலை காரணமாக இதற்கான பயிற்சி நிலையம் கடந்த இரண்டு வருட காலமாக கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் வருடத்திற்கான இறுதிப் பரீட்சை மட்டுமே இம்முறை மேற்படி பாடசாலையில் நடை பெறவுள்ளது. சுமார் 100க்கும் மேற்பட்ட பரீட்சார்த்திகள் இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

# சிங்கள சிங்க கொடி ஏற்ற வவுனியாவில் கடும் எதிர்ப்பு

(நமது நிருபர்)

வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்று நடைபெற்ற தேசிய வலைப்பந்தாட்டப் போட்டியில் மக்கள் காட்டிய எதிர்ப்பு காரணமாக சிறிலங்கா தேசியக் கொடி ஏற்றப்படாமலே இடம் பெற்றது.

தேசிய வலைப்பந்தாட்ட தலைவி ஷராந்தி ராஜபக்ஷ (சிறிலங்கா பிரதமரின் மனைவி) வின் ஏற்பாட்டில் இந்த தேசிய வலைப்பந்தாட்டப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சிறிலங்கா தேசியக் கொடி ஏற்றப்பட்டு விளையாட்டு ஆரம்பிக்கப்படவிருந்த நேரத்தில் மக்கள் காட்டிய எதிர்ப்பு காரணமாக தேசிய கொடி ஏற்றப்படாமல் கம்பத்திலிருந்து அகற்றப்பட்டது.

ஈழநாதம்

திங்கள் விருந்து

கிரிஜா

# நெற் செய்கையின் வளர்ச்சிப் போக்கு

# அன்றும், இன்றும்

முற்காலத்தில் எமது நாட்டில் பயிர் செய்யப்பட்ட நெல் வர்க்கங்களிலிருந்து குறைந்தளவு விளைச்சலையே பெற முடிந்தது. இத்தகைய நெல் இனத்தில் கூட பலவகை வேறுபாடுகளைக் கொண்ட பல வேளாண்மைகளை அடையாளம் காணக்கூடியதாக இருந்தது.

அக்காலத்தில் விவசாயிகளுக்கு அனுகூலம் தரக்கூடிய பல தன்மைகளைக் கொண்ட வேளாண்மைகளில் இருந்து பெறப்பட்ட நெல்லினங்களைச் செய்கை பண்ணுவதன் மூலமே சிறிதளவேனும் அதிக விளைச்சல் கிடைக்கின்றது.



**வெளிநாட்டு நெல்லினம்:-**

அதன் பின்னர் நெல் உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இதற்கு 1950ம் ஆண்டுகளின் முற்பகுதியில் வெளிநாட்டு நெல்லினங்கள் அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு உதாரணமாக பீ.ரி.பி.16 சிகாரிஸ், ரெமாஜா, மார்ஸ் ஆகிய நெல்லினங்களைக் குறிப்பிரிடலாம்.

இதன் மூலமாக தேசிய நெல் உற்பத்தியை குறைந்தளவில் அதிகரிக்கக்கூடியதாக இருந்தது.

**இனக் கலப்புச் செய்யப்பட்ட ஆரம்பகால நெல்லினங்கள்:-**

ஆரம்ப கால கட்டத்தில் இனக்கலப்பின் மூலம் புதிய நெல்லினங்களை இனவிருத்தி செய்வது ஆரம்பமாகியது. முதன்முறையாக நெற் செய்கைக்கு சிபாரிசு செய்யப்பட்ட கலப்பு நெல்லினமாக எச் 4 அறிமுகப்படுத்தப்பட்டது. இது 1958ம் ஆண்டு நிகழ்ந்தது. இவ்வகையான நெல்லினங்களின் மூலம் நெல் விளைச்சலை குறிப்பிடத்தக்களவு அதிகரிக்கக்கூடியதாக இருந்தது.

ஆனால் ஆரம்பகாலத்தில் இனவிருத்தி செய்யப்பட்ட இது போன்ற நெல்லினங்களில் பழைய நெல்லினங்களில் காணப்பட்ட சில பின்னடைவான இயல்புகளும் மீதமாக இருந்தன.

**ஆரம்பகால வேளாண்மையின் இயல்புகள்:-**

நெற் பயிர் அதிக உயரமாக வளர்வது, அதிகளவில் இலைகளை உற்பத்தி செய்வது, இலகுவாக சாய்வது, உரப் பசளைகளுக்கு குறைவான தூண்டற் பேற்றைக் கொண்டுள்ளமை ஆகிய பின்னடைவான இயல்புகளே இங்கு விசேடமாகக் குறிப்பிடத்தக்கவை ஆகும். இவ்வின நெற்கள் பழைய திருந்திய நெல்லினங்கள் என அழைக்கப்படுகின்றன.

**புதிய திருந்திய நெல்லினங்கள்:-**

ஆரம்ப காலத்தில் பழைய திருந்திய நெல்லினங்களை இனவிருத்தி செய்ததுடன் நெல்லினம் ஒன்றின் அதி உச்ச அளவான அறுவடையைப் பெறக்கூடியதாக இருந்தது. 1970ல் சிபாரிசு செய்யப்பட்ட பி.ஜி. 11-11 என்ற இன வகுப்பைச் சேர்ந்த ஆரம்ப நெல்லினமாகும்.

அவ்வினங்களில் கூடிய விளைச்சலைப் பெறக்கூடியதாய் இருப்பதற்கான காரணங்களாவன மத்தியளவான உயரமுடையவையாக இருப்பது, நேரான கட்டையான இலைகள் காணப்படுவது, சாய்தலுக்கு எதிர்ப்புத்தன்மை உடையது. முக்கியமான நோய் பீடைகளை தாங்கி வளரும் தன்மை ஆகிய பயனுள்ள தன்மைகளாகும்.

இவற்றைத் தவிர பழைய நெல்லினங்களில் விசேட இயல்பாகக் கொள்ளக்கூடியது என்னவெனில் கூடிய வைக்கோலும், குறைந்த தானிய விளைச்சலுக்குப் பதிலாக புதிய விருத்தி செய்யப்பட்ட நெல்லினங்களின் மூலம் குறைந்தளவு வைக்கோலையும் கூடிய தானிய விளைச்சலையும் பெறக்கூடியதாகவும் இருந்தது.

**புதிய நெல்லினங்கள் எப்போதும் முதல் தரமே:**

பழைய நெல்லினங்களுடன் ஒப்பிடும் போது புதிய நெல்லினங்கள் இன விருத்தி செய்யப்பட்டதன் நோக்கம் கூடிய விளைச்சலைப் பெற்றுக் கொள்வதற்கே ஆகும். எனவே இவ் நோக்கத்தை அடைவதற்கு முறையாகப் பயிர்களைப் பராமரிப்பது அவசியமானதாகும். ஆனால் எவ்வாறான பயிர்ச்செய்கை முறையின் கீழும், பழைய நெல்லினங்களை விடப் புதிய நெல்லினங்கள் கூடிய ஆற்றலைக் கொண்டுள்ளன. என்பதை நாம் மறந்து விட முடியாது. இதற்கு எம்மால் கவனம் செலுத்த வேண்டியது வெற்றி கரமாகக் களைகளைக் கட்டுக்கடுத்துவது மட்டுமே.

**இலாபகரமான வயது கூடிய நெல்லினங்கள்:-**

தற்போது பயிர் செய்யப்படும் நெல்லினங்களை பிரதானமாக 3, 3 1/2, 4, 4 1/2, 5 மாத வயதுப் பிரிவுகளாகக் பிரிக்கலாம். இதன் போது நாம் கவனம் செலுத்த வேண்டியதொரு அம்சமும் உள்ளது. 4- 4 1/2 மாத நீண்ட வயதுடைய நெல் வர்க்கங்களைச் செய்கை பண்ணும் போது சாதகமற்ற சூழலிலும் பயிர்ச் செய்கை நடவடிக்கையின் போதும் திருப்திகரமான விளைச்சலைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் 5 மாதங்களுக்கு மேற்பட்ட பெரு நெல் (மா.வீ) இனங்களில் இருந்து இவ்வனுகூலத்தைப் பெறுவது சிரமமானதாகும். 3-31/2 மாத நெல்லினங்கள் எம்மால் பொதுவாக வயது குறைந்தவை எனக் கருதப்படுகின்றது. இவ்வகையானவை ''சிறு நெல்லினங்கள்'' ஆகும். இற்றைக்குப் பல வருடங்களுக்கு முன்னர் செய்கை பண்ணப்பட்ட நெல்லினங்களுக்குப் பதிலாக பின்னர் காலத்திற்குக் காலம் விவசாயத் திணைக்களத்தினால் சிபாரிசு செய்யப்பட்ட புதிய நெல்லினங்கள் விவசாயிகளிடையே பிரபல்யமடைந்தது. இதனால் ஆரம்ப காலத்தில் பிரசித்தி பெற்ற நெல்லினங்கள் படிப்படியாக மறைந்து விட்டன. என்றே கூறலாம். இதற்குப் பதிலாக தற்காலத்திலே புதிய புதிய நெல்லினங்கள் வருடத்திற்கு வருடம் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றமையும் விவசாயத்தில் கூடிய விளைச்சலைப் பெற முடிகின்றமைக்கு காரணமாகும்.

## மட்டக்களப்பு கல்விஅபிவிருத்தி சங்கம் நடாத்தும் மாணவர் கல்வி உயர் பெறுபேற்றுக்கான பரிசு பெறுவதற்கு தகுதி பெற்றோர் பெயர்கள்

### 2002 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை:-

| இல | மாணவர் பெயர் | பாடசாலை |
|---|---|---|
| 01 | புள்ளநாயகம் நிருஷன் | மட். துறைநீலாவணை எம்.எம்.ரி.எம்.எஸ் |
| 02 | ஏ.என்.அப்துள் நப்ரிஸ் | மட். அல்ஜீப்ரியா வித்தி. காத்தான்குடி |
| 03 | எம்.ஏ.ஷினாசிபா | மட். கிலுறியா வித்தி. காத்தான்குடி. |
| 04 | ஆர்.டினேஸ்காந்தன் | மட். கண்டலடி அஜந்ததி வித்தியாலயம் |
| 05 | எம்.பி.முகமட் சியாம் | மட். பிறைந்துறைச்சேனை அஸ்கர் வித்தி |
| 06 | என்.லக்சாயினி | மட். வாழைச்சேனை இந்துக்கல்லூரி |
| 07 | ஏ.கே.எம்.றியாஸ்டீன் | மட். மாக்கான் மாக்கார் வித்தி ஏறாவூர் |
| 08 | முகமட் பளீர் பாத்திமா ரிப்னா | மட். அறபா வித்தியாலயம் ஏறாவூர் |
| 09 | ஜெயசிங்கன் ஆதூரன் | மட். கோட்டமுனை கனிஷ்ட வித்தி. |
| 10 | எம்.எம்.சாதிவ் | மட் அல் நாசர் வித்தி, காத்தான்குடி |
| 11 | அகமட்லெவ்வை பாத்திமா மிஸ்கா | மட். காங்கேயனோடை இக்றா வித்தி. |
| 12 | ஜீவரெத்தினம் ஆனந்தமயூரி | மட். அம்பிளாந்துறை கலைமகள் வித்தி |
| 13 | ஜெகநாதன் நித்தியாநந்தனா | மட். திருப்பழுகாமம் விபுலானந்தா வித்தி |

### 2002 க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சை

| இல | மாணவர் பெயர் | பாடசாலை |
|---|---|---|
| 01 | சுபதர்சினி சௌந்தரலிங்கம் | மட். புனித சிசிலியா பெண்கள் பாடசாலை |
| 02 | ஜெயதாரணி விஜயேந்திரா | மட். புனித சிசிலியா பெண்கள் பாடசாலை |
| 03 | ஜனனி தில்லைநாதன் | மட். வின்சன்ட் மகளிர் கல்லூரி |
| 04 | லக்சினி சிவலிங்கம் | மட். வின்சன்ட் மகளிர் கல்லூரி |
| 05 | தம்பிரெட்ணம் கோகுலம் | மட். புனித மிக்கேல் கல்லூரி |
| 06 | அருள்மொழிராஜா எழில்நிலா | மட். களுதாவளை மகா வித்தியாலயம் |
| 07 | சின்னையா சத்தியரேகா | மட். பட்டிருப்பு மகா வித்தியாலயம் |
| 08 | முகமட் ரசீப் அகமட் நிகாஸ் | மட். அல்கிறா வித்தி காத்தான்குடி |
| 09 | அப்துள் முனாப் அப்டூஸ் அக்கூர் | மட். காத்தான்குடி மத்திய. மகா வித்தி |
| 10 | ஆர்.அகமட் ராஜீஸ் | மட். அலிகார் மத். கல்லூரி, ஏறாவூர் |
| 11 | என்.எல்.முகமட் ரியாஸ் | மட். அலிகார் மத். கல்லூரி, ஏறாவூர் |
| 12 | எம்.ஏ.ஆர்.அஸ்மல் | மட். அன்நூர் தேசிய பாடசா, ஓட்டமாவடி |
| 13 | இஸ்மாலெவ்வை முகமட் சாஜாத் | மட். அன்நூர் தேசிய பாடசா. ஓட்டமாவடி |
| 14 | மயூரி தர்மதாஸ் | மட். செங்கலடி மகா வித்தியாலயம் |
| 15 | தனுசா ராஸா | மட். செங்கலடி மகா வித்தியாலயம் |

| இல | மாணவர் பெயர் | பாடசாலை |
|---|---|---|
| 16 | பிறற்றிக் மதிவதனி | மட். தன்னாமுனை புனித வளனார் வித்தி |
| 17 | ஜெயரெட்ணம் பிரிந்தா | மட். மண்டூர் ஆர்.கே.எம். வித்தியாலயம். |
| 18 | தங்கையா ஜனுரதா | மட். மண்டூர் ஆர்.கே.எம். வித்தியாலயம் |
| 19 | கணபதிப்பிள்ளை ரதன்சந்தாபாத் | மட். வாழைச்சேனை இந்துக்கல்லூரி |
| 20 | நிர்மலகாந்தன் பிறேமச்சந்திரன் | மட். வாழைச்சேனை இந்துக்கல்லூரி |
| 21 | அனுசிகா மகாதேவா | மட். வின்சன்ட் மகளிர் கல்லூரி |
| 22 | முத்துலிங்கம் உமாகாந்த் | மட். புனித மிக்கேல் கல்லூரி |
| 23 | எஸ். நரேந்திரகுமார் | மட். சிவானந்தா தேசிய பாடசாலை |
| 24 | மகேந்திரராஜா அரவிந்த் | மட். ஆரையம்பதி மகா வித்தியாலயம் |
| 25 | இராசையா மன்மதன் | மட். ஆரையம்பதி மகா வித்தியாலயம் |

### 2002 க.பொ.த (உயர்தரப்) பரீட்சை

| இல | மாணவர் பெயர் | பாடசாலை |
|---|---|---|
| 01 | அப்துள் கபூர் பாத்திமா பர்கானா | மட். ஏறாவூர் அல்முனிறா வித்தியாலயம் |
| 02 | செ.விஜிதா | மட். வந்தாறுமூலை மகா வித்தியாலயம் |
| 03 | அப்துள் சலாம் முகமது ரிம்சான் | மட். அலிகார் தேசிய பாடசாலை ஏறாவூர் |
| 04 | ஸ்ரீதரன் அன்ரனி மோகனராஜ் | மட். புனித மிக்கேல் கல்லூரி |
| 05 | அருளானந்தம் அமலினி | மட். புனித சிசிலியா பெண்கள் பாடசாலை |
| 06 | எஸ்.என்.எவ்.றிஸ்பியா | மட். அந்நூர் தேசிய பாடசா. ஓட்டமாவடி |
| 07 | என்.சசிதரன் | மட் மெதடிஸ்த மத்திய கல்லூரி |
| 08 | குணபால ஜெயக்காந் | மட். புனித மிக்கேல் கல்லூரி |
| 09 | சீவரெட்ணம் ஸ்கந்தன் | மட். புனித மிக்கேல் கல்லூரி |
| 10 | முகமது முஸ்தபா முகமது ஜிப்ரி | மட். காத்தான்குடி மத்திய கல்லூரி |
| 11 | கே.ராம்ஜீ | மட். மெதடிஸ்த மத்திய கல்லூரி |
| 12 | சங்கரலிங்கம் ஜெயசங்கர் | மட். சிவானந்தா தேசிய பாடசாலை |

தொடரும்...

# பக்தாத்துக்கு அண்மித்ததாகப் படை நகர்த்த பிரித்தானியா இணக்கம்

(ராய்ட்டர்)

பக்தாத்தில் அதிகரித்த பயங்கரவாதப் பிரதேசங்களுக்கு தமது படையினரை நகர்த்திக் கொள்வதற்கு பிரித்தானியா இணங்கியுள்ளதாகவும், இதன் காரணமாக பிரித்தானியப் பிரதமர் டொனி பிளேயர் கடுமையான பின்விளைவுகளுக்கு முகம் கொடுத்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றது. இது விடயமாக பாதுகாப்புச் செயலர் ஜியூப் கூன் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் படை நகர்த்துதல் விடயத்தைப் பொறுத்தவரை தேவையான இடத்துக்கு தேவையான அளவு படையினரை வைத்துக் கொள்ளுதல் என்பது ஒரு முக்கியமான ஒன்றாகும்.



இந்த அணுகு முறையில் வாரம் ஒன்றுக்கு 850 துருப்புக்களை நகர்த்தும் செயல் தொடர்ந்தும் இடம்பெறும். எனினும் எதிர்வரும் தை மாதம் ஈராக்கில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலையொட்டியும், சுமுகமான தேர்தல் ஒன்றை நடாத்தி முடிப்பதற்குமான போதிய ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுக்கும் முகமாகவும் மேற்படி புதிதாக பக்தாத் நோக்கிய படை நகர்வுக்கு தாங்கள் இணங்கியிருப்பதாகவும் தெரிவித்திருக்கும் பாதுகாப்புச் செயலர் பலூஜா போன்றதொரு நெருப்புக்கு நிகரான அண்மைய தீவிரவாத ஒழிப்புத் தாக்குதல்களுக்கு அமெரிக்கப்படையினருக்கு எதிர்கால த்தில் ஒத்தாசை வழங்குவதும் தமது குறிக்கோள் என்றும் பகர்ந்திருக்கின்றார்.

டொனிபிளேயர் அவர்களின் தொழிற்கட்சியில் உள்ள அரசியல் ஆய்வாளர்கள் மேற்படி பயங்கரமான பிரதேசத்துக்கு பிரித்தானியப் படையினர் நகர்த்தப்படுவதைப் பற்றி திகிலடைந்துள்ள நிலையில் அமெரிக்கத் தேர்தலின் எதிரொலியாக நவம்பர் மாதம் 2ம் திகதிக்குப்பிற்பாடு மாற்று நடவடிக்கைகள் எதுவும் சம்பவிக்கக்கூடிய ஒரு நிலைப்பாடு இருப்பதைப் பற்றி பிரித்தானிய இராணுவ அதிரடிப்படைகள் சிந்திப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## மலேசியாவில் சட்ட விரோதமாக குடியேறியவர்களுக்கு பொது மன்னிப்பு

(ராய்ட்டர்)

மலேசியாவில் சட்ட விரோதமாக பிரவேசித்துள்ள இந்தோனேசியர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்க அந்நாட்டு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மலேசியாவில் சட்ட விரோதமாகத் தொழில் புரிந்து வரும் இந்தோனேசியப் பிரஜைகளுக்கு அபராதம் எதுவும் செலுத்தாமல் நாடு திரும்பலாம் என மலேசிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

புனித ரமழான் பண்டிகையை முன்னிட்டு மலேசிய அரசாங்கம் பொது மன்னிப்புச் சலுகையை வழங்க முடிவு செய்துள்ளது. பல லட்சக்கணக்கான இந்தோனேசியர்கள் மலேசியாவில் சட்ட விரோதமாகத் தொழில் புரிவது கண்டு பிடிபட்டால் 5 வருட சிறைத்தண்டனை அல்லது மலேசிய நாணயமாக பத்தாயிரம் றிங்கிட் அபராதம் விதிக்கப்படும்.

அடுத்த வருடத்திற்குள் சுமார் 12 லட்சம் சட்ட விரோத குடியேற்றவாசிகளை மலேசியா அங்கிருந்து வெளியேற்றத் திட்டமிட்டுள்ளது.

## ஜப்பானில் பூமியதிர்ச்சி 13 பேர் பலி; 800 பேர் காயம்



(ராய்ட்டர்)

ஜப்பானில் ஏற்பட்ட சக்தி மிக்க பூமியதிர்ச்சியினால் 13 பேர் உயிரிழந்துள்ளனர். மலைப்பகுதியின் வடக்கு ஜப்பானில் ஏற்பட்ட இந்தப் பூமியதிர்ச்சியினால் 800க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளார்கள்.

6.8 றிஜிற்ரெர் அளவான இந்தப் பூமியதிர்வு 10 மணித்தியாலயத்திற்கு மேல் நீடித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதனால் சுமார் 27800 வீடுகள் சேதமடைந்திருப்பதாகவும், இந்த வீடுகளுக்கான மின் விநியோகம் மற்றும் தொலைபேசி இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது. முதற்தடவையாக அதிவேக ரெயிலும் பூமியதிர்வு கா்ரணமாக தடம் புரண்டுள்ளது.

## கஷ்மீர் கொள்கையில் மாற்றமில்லை மறுக்கிறார் பாகிஸ்தான் அமைச்சர்

(இஸ்லாமாபாத்)

கஷ்மீர் கொள்கையில் தலைகீழ் மாற்றம் ஏற்பட வாய்ப்பில்லை என்று பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் குர்ஷித் முகமது கசூரி கூறினார்.

பாகிஸ்தான் அரசு தொலைக்காட்சிக்கு அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது: இந்தியா, பாகிஸ்தான் அமைதிப்பேச்சு வார்த்தை சுமுகமான திசையில் செல்கிறது. இப் பகுதியில் பதட்டம் நிலவினால் முதலீடுகள் இருக்காது. அதற்கு அமைதி தேவை. எனவே இந்தியா, பாகிஸ்தான் இடையே நிரந்தர அமைதி ஏற்படுத்தும் வழிகளை ஆராய்ந்து கொண்டு இருக்கிறோம். கஷ்மீர் கொள்கையில் பாகிஸ்தானுக்கு தலைகீழ் மாற்றம் ஏற்பட வாய்ப்பில்லை. உலகின் எல்லா நாடுகளும் கஷ்மீர் பிரச்சினை முடிவுக்கு வரவேண்டும் என்பதில் ஆர்வமாக உள்ளன. இதில் அமெரிக்காவின் வற்புறுத்தல் ஏதுமில்லை. ஆப்கானிஸ்தானில் ரத்தக் களறியை தடுப்பதற்காகவே தலிபான்களை முன்னர் பாகிஸ்தான் ஆதரித்தது. பாகிஸ்தானின் பொருளாதார வளர்ச்சிக்கு ஆப்கானிஸ்தானில் அமைதி நிலவுவது அவசியம். தங்களின் பிடிவாதமான கொள்கைகளால் தலிபான்கள் தனிமைப் பட்டு இருக்கின்றனர்.



# உலக செய்திகள்

## யஷீர் அரபாத்தை வைத்திய குழு பரிசோதனை செய்தது

(ராய்ட்டர்)



பலஸ்தீன ஜனாதிபதி யஷீர் அரபாத்தை ரியோசிய வைத்தியர் குழுவொன்று பரிசோதனை செய்துள்ளது. சுகயீனமுற்றுள்ள அறபாத்தை கடந்த வாரம் எகிப்திய வைத்திய குழுவொன்றும் பரிசோதனை செய்துள்ளது.

ஒரு வார காலமாக அரபாத் சுகயீனமுற்றுள்ளார். என்றும் அவரது சுகயீனம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் பலஸ்தீனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் நிலமை மோசமான வகையில் இல்லை என்றும் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளார் என்றும் அரபாத்தின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

## வீரப்பனை கொன்ற அதிகாரியை உடன் பதவி நீக்கவும்.

### -விடுதலைப்படை எச்சரிக்கை-

(ராய்ட்டர்)

சந்தனக் கடத்தல் வீரப்பனைச் சுட்டுக் கொன்ற அதிகாரியை சேவையிலிருந்து இடைநிறுத்தா விட்டால் தமிழகத்தில் குண்டுகள் வெடிக்கும் எனஇந்திய தீவிரவாத அமைப்பொன்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

தமிழக மற்றும் கர்நாடக அரசுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருந்து வந்த சந்தனக்கடத்தல் வீரப்பனும் அவனது சகாக்களும் கடந்த 18ம் திகதி சுட்டுக் கொல்லப் பட்டார்கள் வீரப்பனை உயிருடன் பிடிக்க முடியாததைக் கண்டித்து அவரது ஆதரவாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

விடுதலைப் படை என்ற தமிழர் தீவிரவாத அமைப்பு வீரப்பனைச் சுட்டுக் கொன்ற அதிகாரியை சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்ய வேண்டும் என்றும் இல்லையேல் தழிழகத்தின் பல பகுதிகளிலும் சக்தி மிக்க குண்டுகள் வெடிக்கும் என்றும் எச்சரிக்கை விடுத்திருக்கின்றது. இந்த அமைப்பு தனிப்பட்ட முறையில் கடிதம் மூலம் எச்சரிக்கைகளை விடுத்துள்ளது.

## அமெரிக்க அதிபர் புஷ்-கெரி வாக்கு வேட்டையில் தீவிரம்





(வொஷிங்டன்)

ஜோர்ஜ் புஷ் அவர்களும் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோன் கெரி ஆகிய இருவரும் தத்தமது தேர்தல் பிரச்சாரத்தின் இறுதிக் கட்டத்திற்கு வந்திருக்கின்றார்கள். முதியோர்களின் வாக்குகளை அதிகம் கவரும் வண்ணம் இரு வரும் போட்டி போட்டுக் கொண்டு தீவிரமாய் இறங்கியிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றது. இதே நேரம் சில முன்னணி கருத்துக் கணிப்பு நிறுவனங்கள் தந்திருக்கும் தரவுகளின் படி இரண்டு பேரினதும் செல்வாக்கு பெரிய வித்தியாசத்திலில்லை என்று தெரிகின்றது. சொக்பை சர்வதேச கணிப்பு நிறுவனத்தின் படி 45-46 சதவிகிதம் அதிபர் புஷ் அவர்களுக்கு இருப்பதாகத் தெரிவித்துள்ளது. ரஸ்மேசின் தரவுப்படி புஷ் அவர்களுக்கு 48-47 சதவிகிதம் என்றும் ரீ.ஐ.பீ.பீ யின் தரவுப்படி 47-46க்குள் இருப்பதாகவும் தெரிய வருகின்றது.இதே நேரம் பொக்ஸ் நியூஸ் போள் எனும் நிறுவனத்தின் கருத்துக் கணிப்பின் படி 56 சதவீதமான வாக்குகள் ஜனநாயகக் கட்சிக்குக் கிடைக்கும் எனத் தெரிவித்துள்ளது. ஆனால் சகல நிறுவனங்களின் கணிப்புக்களையும் ஒட்டு மொத்தமாய் கணிப்பீடு செய்த போது தேசிய பாதுகாப்புக்கு அதிபர் புஷ் முன்னிலை வகிப்பதாகவும் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோன் கெரி அவர்கள் பொருளாதார நிபுணத்துவத்திலும் வைத்தியக் கவனிப்பிலும் புஷ்சை விடவும் அதி கூடியதாக முன்னிலையில் இருப்பதாகவும் நம்பகமாகத் தெரிய வருகின்றது. ஆனாலும் மிகக் கிட்டியதாக. பொக்ஸ் நிறுவனம் செய்ய கருத்துக் கணிப்பில் 66 சதவிகிதமானவர்கள் தலைமைத்துவத்தை மாற்றம் செய்யும் மனோபாவத்துடன் இருப்பதாகத் தெரிவித்துள்ளது.

## பொருளாதார வளர்ச்சியில் தகர்வு

(ராய்ட்டர்)

ஐக்கிய. ராட்சியத்தின் பொருளாதார வளர்ச்சி வீதம் சற்று குறைவடைந்துள்ளது. கடந்த மூன்று மாதங்களில் பொருளாதார வளர்ச்சி வீதம் 4 வீதமாகவே அதிகரித்துள்ளது. இதே வேளை வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் 0.7 வீதமாகவும் அடுத்த காலாண்டின் பொருளாதார வளர்ச்சி 0.9 வீதமாகவும் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## யூதக் குடியேற்றத்தை வெளியேற்றுவதற்கு எதிராக சாட்ஸ் கட்சி வாக்களிக்க தீர்மானம்

(ராய்ட்டர்)

பலஸ்தீனத்தின் காசாப் பகுதியிலிருந்து யூதக் குடியேற்றங்களை வெளியேற்றும் திட்டத்திற்கு எதிராக வாக்களிப்பதற்கு சாட்ஸ் கட்சி தீர்மானித்துள்ளது.

பிரதமர் ஏரியல் ஷரோனின் திட்டத்திற்கெதிராக வாக்களிக்க வேண்டுமென சாட்ஸ் கட்சியின் ஆன்மீகத் தலைவர் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற அவரது கட்சி உறுப்பினர்கள் 11 பேருக்கும் உத்தரவிட்டிருக்கின்றார். காசாப் பகுதியிலிருக்கும் யூத குடியேற்றங்களில் குறிப்பிட்ட ஒரு பகுதியை அங்கிருந்து வெளி யேற்ற பிரதமர் ஏரியல் ஷரோன் திட்டமிட்டிருக்கின்றார்.

இந்தத் திட்டத்திற்கு பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்த அவர் திட்டமிட்டிருக்கின்றார். இந்த வாக்கெடுப்பில் நிச்சயம் வெற்றியீட்டும் நம்பிக்கையில் ஏரியல் ஷரோன் செயற்பட்டு வருகின்றார். வாக்கெடுப்பின் போது 120 வாக்குகளில் 67 வாக்குகளைப் பெற்று ஷரோன் வெற்றி பெறுவார் என்று அரசியல் அவதானியொருவர் தெரிவித்துள்ளார்.




# சச்சின் பங்கேற்கும் இந்திய அணியை வீழ்த்துவதுதான் எங்கள் இலக்கு

## ரிக்கி பொண்டிங் கூறுகின்றார்

(நமது நிருபர்)



''நாக்பூர் டெஸ்டில் சச்சின் பங்கேற்பது மகிழ்ச்சியான விஷயம். ஏனென்றால், சச்சின் பங்கேற்கும் இந்திய அணியை வீழ்த்துவதுதான் எங்களுக்குப் பெருமை,'' என்கின்றார் அவுஸ்ரேலிய அணித் தலைவர் ரிக்கி பொண்டிங்.

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணித்தலைவர் ரிக்கி பொண்டிங், காயம் குணமடைந்து மும்பை வந்து விட்டார். அடுத்தமாதம் 3ம் திகதி மும்பையில் துவங்கும் கடைசி டெஸ்ட் போட்டியில் அவர் களமிறங்குகிறார். மூன்றாவது டெஸ்ட் போட்டிக்காக, அவுஸ்ரேலிய வீரர்கள் நேற்று நாக்பூர் சென்றனர். முன்னதாக, நேற்று முந்தினம் பொண்டிங் நிருபர்களுக்கு அளித்த பேட்டி:

எனது காயம் குணமாகி விட்டது. கடந்த முறை எனது இந்தியப் பயணத்தில் நான் நன்றாக விளையாடவில்லை. இம்முறை அதை ஈடுகட்ட நினைத்திருந்தேன். ஆனால், காயம் என்னை தடுத்து விட்டது. மும்பையில் நடக்கும் கடைசி டெஸ்ட் போட்டியில் எனது திறமையைக் காட்ட ஆர்வமாக இருக்கிறேன். அடம் கில்கிறிஸ்ட் அணித்தலைவர் பொறுப்பை மிகச்சிறப்பாகச் செய்கிறார். இந்திய அணியைச் சமாளிக்க இரு ஸ்பின்னர்களுடன் விளையாடவேண்டும் என்று நான் நினைக்கவில்லை.

நாக்பூர் டெஸ்டில் சச்சின் டெண்டுல்கர் விளையாடப் போவதாக செய்திகள் வெளியாகி உள்ளது. அவரது ரசிகர்களுக்கு இது மகிழ்ச்சியான செய்தி. எங்களுக்கும் மகிழ்ச்சிதான். காரணம், சச்சின் பங்கேற்கும் இந்திய அணியை வீழ்த்துவதில்தான் எங்களுக்குத் திருப்தி. அவர் பங்கேற்கும் போது, இந்திய அணி தனது முழுத்திறமையுடன் விளையாடும். முழுத் திறமையுடன் கூடிய இந்திய அணியை வென்ற பெருமை எங்களுக்குக் கிடைக்கும்.

# மூன்றாவது டெஸ்ட் தொடரில் களமிறங்குகின்றார் சச்சின்

(நமது நிருபர்)

இந்திய கிரிக்கெட் அணியின் நம்பிக்கை நட்சத்திரம் சச்சின் டெண்டுல்கர், கடந்த மூன்று மாதங்களாக போட்டிகள் எதிலும் பங்கேற்கவில்லை. அவரது இடது முழங்கை பகுதியில் காயம் (டென்னிஸ் எல்போ) ஏற்பட்டுள்ளது. காயத்தில் இருந்து அவர் முழுமையாகக் குணமானாலும், நீண்ட நேரம் நின்று விளையாடக்கூடிய அளவுக்கு உடல் தகுதி பெறாமல் இருந்தார். ஆனாலும், அவுஸ்ரேலியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்டில் பங்கேற்பது என்பதில் உறுதியாக இருந்தார்.



விளையாடும் அளவுக்கு அவர் உடல் தகுதியுடன் இருக்கிறாரா என்பதைப் பரிசோதிக்க இந்திய கிரிக்கெட் அணி டாக்டர் ஆன்ட்ரூ லீபஸ், மும்பையின் பிரபல டாக்டர் ஆனந்த் ஜோஷி ஆகியோரை கிரிக்கெட் சபை நியமித்தது. உடல் தகுதிச் சோதனை மும்பை நகரில் நேற்று முன்தினம் நடந்தது. பாந்த்ரா பகுதியில் உள்ள அரங்கில் நேற்று முன்தினம் காலை நடந்த உடல் தகுதிச் சோதனையில் ஆர்வமாகக் கலந்து கொண்டார் சச்சின்.

மும்பை ரஞ்சி அணியின் முன்னாள் தலைவர் பரஸ் மாம்ப்ரே மற்றும் சில வேகப்பந்து வீச்சாளர்கள் முதலில் அவருக்குப் பந்து வீசினார்கள். அவற்றைத் தடுத்து நிதானமாக விளையாடினார். பிறகு உள்ளூர் சுழல் பந்து வீச்சாளர்களும் சச்சினுக்கு பந்து வீசி சோதித்தனர். சுமார் 20 நிமிடம் இந்தச் சோதனை நடந்தது. எந்தப் பிரச்சினையும் இன்றி அருமையாக துடுப்பாட்டம் ஆடினார் சச்சின்.

# மீண்டும் அதிரடி ஆட்டத்தில் ஜெய சூரியா பிரகாசம்

(நமது நிருபர்)

ஜெயசூர்யா அபாரமாக ஆடி இரட்டை சதம் அடிக்க, பாகிஸ்தான் அணிக்கு 418 ஓட்டங்கள் வெற்றி இலக்கு நிர்ணயித்துள்ளது இலங்கை. பாகிஸ்தான் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. முதல் டெஸ்ட் பைசலாபாத்தில் நடக்கிறது. முதல் இன்னிங்சில் இலங்கை 243, பாகிஸ்தான் 264 ஓட்டங்கள் எடுத்தன. அடுத்து இரண்டாவது இன்னிங்சை துவக்கிய இலங்கை மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் 3 விக்கெட் இழப்புக்கு 285 ஓட்டங்கள் எடுத்தது. ஜெயசூர்யா 131, சமரவீரா 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். நான்காம் நாள் ஆட்டம் நேற்று முன்தினம் நடந்தது.

ஆட்டம் துவங்கிய சிறிது நேரத்தில் சமரவீரா (21), முபாரக் (0), கலுவித்ரன (1), வாஸ் (4) சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். ஆனாலும், ஜெயசூர்யாவின் அதிரடி ஆட்டத்தினால் அணியின் ஸ்கோர் விரைவாக உயர்ந்தது. 8 விக்கெட் இழப்புக்கு 337 ஓட்டங்கள் என்ற நிலையில் பெர்னாண்டோ களமிறங்கினார். ஒருமுனையில் இவர் நல்ல ஒத்துழைப்பு அளிக்க, டெஸ்ட் போட்டிகளில் தனது மூன்றாவது இரட்டை சதத்தை கடந்தார் ஜெயசூர்யா. அணியின் ஸ்கோர் 438 ஓட்டங்களாக இருந்த நிலையில் பெர்னாண்டோ ஓடும் போது ஆட்டமிளந்தார். இந்த ஜோடி 9வது விக்கெட்டுக்கு 101 ஓட்டங்கள் சேர்த்தது.

இதில் பெர்னாண்டோ பங்கு வெறும் 1 ஓட்டம் மட்டுமே. மீதமுள்ள 100 ஓட்டங்களையும் விளாசியது ஜெயசூர்யாதான். இவர் 253 ஓட்டம் எடுத்த நிலையில் டேனிஷ் கனேரியா பந்தில் ஆட்டமிழந்தார். இதுவே டெஸ்ட் போட்டிகளில் இலங்கை வீரர் எடுக்கும் நான்காவது அதிகபட்ச ஸ்கோர். மேலும், பாகிஸ்தானுக்கு எதிராக அதிகபட்ச ஓட்டம் எடுத்த முதல் இலங்கை வீரர் என்ற பெருமையையும் இவர் பெற்றார். ஜெயசூர்யா 347 பந்துகளை சந்தித்து 33 பவுண்டரி, 4 பிரமாண்ட சிக்சர்கள் விளாசினார். இதன் மூலம் இலங்கை அணி இரண்டாவது இன்னிங்சில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 438 ஓட்டங்கள் குவித்தது. பாகிஸ்தான் தரப்பில் கனேரியா 4, அக்தர் 3, சோயப் மாலிக் 1 விக்கெட் கைப்பற்றினர். 418 ஓட்டம் எடுத்தால் வெற்றி என்ற மிக கடின இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் அணி, பெர்னாண்டோவின் அபார பந்துவீச்சுக்கு அடி பணிந்தது. இவரது வேகத்தில் யாசிர் ஹமிது (17), ஆசிம் கமால் (1), இம்ரான் பர்கத் (53), இன்சமாம் (3) ஆகியோர் சீரான இடைவெளியில் வெளியேறினர்.

# கனக நகர் வித்தியாலயத்திற்கு நூலகம் அமைக்கப்படுமா?

தம்பிலுவில் கிராமத்தில் பல பாடசாலைகள் இருப்பது அனைவரும் அறிந்தவிடயமாகும். இப்பாடசாலைகளுள் ஒன்றாக விளங்குவது கனக நகர் மகா வித்தியாலயமாகும். இப்பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் கவலை என்னவென்றால் இப்பாடசாலைக்கு ஒரு வாசிகசாலை இல்லை என்பதே ஆகும்.

இப்பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களில் கூடுதலானவர்கள் வாசிப்பு வீதம் குறைந்த நிலையிலேயே உள்ளனர். இதற்கான முக்கிய காரணம் கனக நகர் வித்தியாலயத்தில் வாசிகசாலை இல்லாமையே எனலாம். இங்கு கல்வி பயிலும் மாணவர்களில் அனேகமானவர்கள் வாசிப்பில் ஆர்வமில்லாதவர்களாகவே இருக்கின்றனர். ''வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்'' என்ற கூற்று இப்பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களும் எந்தவிதத்தில் பொருந்தும் இதற்கான காரணம் வாசிகசாலை என்றால் என்னவென்று கூட தெரியாத நிலையிலேயே இம்மாணவர்கள் இருப்பது மிகவும் பரிதாபமளிக்கும் விடயமாகும்.

''இன்றைய நவீன யுகத்தில் பலவிதமான விந்தைகள், புதிய கண்டுபிடிப்புகள், என பல்வேறு விதமான செயற்பாடுகள் நாளுக்கு நாள் நடைபெற்ற வண்ணமே இருக்கின்றது. இத்தகைய செயற்பாடுகளை மாணவர்கள் அறிய வேண்டுமாக இருந்தால் இந்தப் பாடசாலையில் வாசிகசாலை மிக மிக அவசியம் இது இருந்தால் நாளாந்தப் பத்திரிகைகள், புத்தகங்கள், சஞ்சிகைகள், போன்ற அறிவுக் கருவூலங்களை ''நூலகப் பாட வேளையில் வாசித்துப் பயன் பெறலாம்தானே'' என இப்பாடசாலை மாணவர்கள் தங்களது மன ஆதங்கத்தை ஈழநாதம் எங்கள் குரலூடாகத் தெரிவிக்கின்றனர்.

பாடசாலையில் ஆசிரியர்கள் கற்பித்தாலும் அவர்கள் கற்பித்த விடயங்களை மாணவர்கள் அவ்விடத்திலே மறந்து விடுகின்றனர். இதற்கு காரணம் ஆசிரியர்கள் கற்பிக்கும் பாடங்களை மீண்டும் வாசிக்காமையே எனலாம். இதற்கு முக்கிய காரணம் இப்பாடசாலையில் வாசிகசாலை இல்லாமையும் எனலாம். இங்கு கல்வி பயிலும் மாணவர்களின் கூடுதலானவர்கள் எழுத்துக்களை இனம் கண்டு வாசிக்கத் தெரியாதவர்களாகவே இவர்கள் இருக்கின்றார்கள்.

எனவே மாணவர்களின் வாசிப்பு ஆற்றலை விருத்தி செய்ய பெற்றோர்களும், ஆசிரியர்களும், மற்றும் அதிபர் ஆகியோர் கூடுதலான கவனமெடுப்பதுடன் கனக நகர் பாடசாலைக்கு என்று ஒரு வாசிகசாலையை திறந்து மாணவர்களின் வாசிப்புத் திறனை விருத்தியடையச் செய்ய மேற்குறித்தவர்கள் உரிய அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவந்து மாணவர்களின் நலனுக்காக வாசிகசாலை ஒன்றை இப்பாடசாலையில் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கனக நகர் பாடசாலை மாணவர்களின் சார்பில் ஈழநாதமூடாக கோரிக்கை விடுக்கின்றேன்.

**பு.சீலன்**
**தம்பிலுவில்**

# வீதி திருத்தியமைக்கப்பட வேண்டும்

மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வவுணதீவிலிருந்து கரவெட்டி வரையும் செல்லும் பிரதான வீதியானது மிகவும் மோசமான நிலையில் குன்றும், குழியுமாகக் காணப்படுவதனால் மக்கள் பெரும் சிரமத்துக்குள்ளாக்கப்படுகின்றார்கள்.

வவுணதீவு இருந்து செல்லும் வீதி தார் ஊற்றப்பட்ட முக்கியமான வீதியாகும். இதனூடாக மக்கள் பல கிராமங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. அதாவது மங்கிகட்டு, ஈச்சந்தீவு, நாவற்காடு, கரவெட்டி, போன்ற இடங்களில் இருக்கின்ற மக்கள் எந்தவிடயமாகப் பயணம் செய்யும் போது செல்கின்ற வீதி இதுவாகும்.

மட்டக்களப்பு நகரில் இருந்து பஸ் சேவை ஒன்று கரவெட்டி வரையும் நடைபெறுகின்றது. இந்த பஸ் அடிக்கடி பழுதடைந்து வீதியோரங்களில் கிடப்பதைக் காணக் கூடியதாக உள்ளது. அது மட்டுமல்ல சைக்கிள், மோட்டார் சைக்கிள், ஏனைய வாகனங்கள் கூடச் செல்லமுடியாது வீதியுடைந்து தகர்க்கப்பட்ட நிலையில் இருப்பதனால் இவ்வீதியினால் பயணம் செய்யும் போது மிகவும் அவதான மாகச் செல்லவேண்டி இருக்கின்றது.

**நலன் விரும்பி**

# எங்கள் குரல்

## கட்டாக்காலி நாய்களின் தொல்லைகளுக்கு தீர்வு கிடையாதா?

மட்டக்களப்பு மாநகரசபை எல்லைக்குட்பட்ட கூடுதலான வீதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்த வண்ணமே இருக்கின்றது. இதனால் இவ்வீதிகளால் பயணிக்கும் பயணிகளுக்கு பல இடையூறுகள் இந்நாய்களால் ஏற்படுவதாக ஈழநாதமூடாக தமது கவலையைப் பயணிகள் கூறுகின்றனர்.

கட்டாக்காலி நாய்களின் அதிகரிப்பால் பயணிகள் அச்சத்துடனே தமது பயணத்தை மேற்கொள்கின்றனர். இந்த நாய்கள் நடுவீதிகளில் நடமாடுவதால் வாகனப் போக்குவரத்தும் தடைப்படுகிறது. இதனால் உரிய நேரத்திற்கு தமது அலுவல்களை செய்து முடிக்காத அளவுக்கு இந்நாய்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்தபடியே செல்கின்றது.

இந்தக் கட்டாக்காலி நாய்கள் வெளியேற்றும் கழிவால் நகரங்களில் சுகாதாரக் கேடு ஏற்படுகின்றது. இந்நாய்களுக்கு ஏற்படும் ''விசர்நோய்'' காரணமாக இந்த நாய்கள் பாதையால் பயணிக்கும் பாதசாரிகளை துரத்தி அவர்களுக்கும் கடிக்கின்ற நிலையும் காணப்படுகின்றது. இதனால் அவர்கள் வைத்தியசாலைக்கு தினமும் சென்று இந்நாய்க் கடிக்கான சிகிச்சையினைப் பெறும் ஒரு அவல நிலையும் தென்படுகின்றது.

மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளர் அவர்களே இக்கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கு மிகவிரைவில் நடவடிக்கை எடுத்து மாநகரசபை எல்லைக்குட்பட்ட வீதிகளுக்குரிய போக்குவரத்தை சீர் செய்ய இந்நாய்களை அழிக்க வேண்டும் என மட்டக்களப்பு மாநகரசபை எல்லைக்குட்பட்ட மக்கள் ஈழநாதமூடாக கோரிக்கை விடுக்கின்றனர்.

**சுழியோடி**

**அன்புடன் வாசகர் நெஞ்சங்களுக்கு!**

உங்கள் பிரதேசத்தில் அபிவிருத்தியில் பாரபட்சமா, புறக்கணிப்பா, ஊழல் மோசடிகளை ஈழநாதம் எங்கள் குரலுக்கு தகுந்த ஆதாரங்களுடன் அனுப்பிவையுங்கள் நிச்சயம் பிரசுரிப்போம்.

**அனுப்ப வேண்டிய முகவரி**
**எங்கள் குரல்**
**ஈழநாதம்**
**மட்டக்களப்பு பதிப்பு**
**பிரதான வீதி**
**கொக்கட்டிச்சோலை.**



**சிந்தனைக்கு!**
இந்த உலகில் அநீதியும் அடிமைத்தனமும் இருக்கும் வரை, சுதந்திரத்தை இழந்து வாழும் மக்கள் இருக்கும் வரை, விடுதலைப் போராட்டங்களும் இருக்கத்தான் செய்யும். இது தவிர்க்க முடியாத வரலாற்று நியதி.

தமிழீழத் தேசியத் தலைவர்

ஈழநாதம்
மக்கள் தினசரி மட்டக்களப்பு பதிப்பு
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை. 25-10-2004

மின்னஞ்சல் : batti@eezhanatham.com
தொலைபேசி : 065-2226110
தொலைநகல் : 065-2226303

# பேரினவாதத்தின் விஷ்வரூபம் பிந்துனுவெவ படுகொலை

சிங்களப் பேரினவாத சக்திகள் ஆடிய இரத்த வெறியாட்டத்தில் பிந்துனுவெவப் படுகொலையும் தமிழினத்தின் வரலாற்றில் சுட்டெரிக்கும் சுடுதணலாய் நிற்கின்றது. ஈழ விடுதலைப் போரில் சிங்கள இனவாத சக்திகள் தமிழினத்தை ஏப்பமிட வடித்த யுக்திகளில் சிறைகூடப் படுகொலைகளும் வரலாற்றில் பதிவாகியிருக்கின்றன.

வெலிக்கடைப் படுகொலை 53 தமிழ் இளைஞர்கள் சிங்களக் காடையர்களினால் வெட்டிக் குவித்த அந்த சம்பவத்தை ஒத்ததொரு படுகொலையாக 2000ம் ஆண்டு பிந்துனுவெவப் படுகொலையும் அமைந்து விட்டது.

கடந்த விடுதலைப் போரில் தமிழ் இளைஞர்களைச் சிங்கள இராணுவம் வகைதொகையின்றி அழித்தது. முகாம்களில் அடைத்துச் சித்திரவதை செய்தது. சிங்களவதை முகாம்களில் தமிழ் இளைஞர்களின் கழுத்தில் டயர் இடப்பட்டு உயிரோடும் எரிக்கப்பட்டனர். இவ்வாறான மனித உரிமை மீறல் சம்பவங்களுக்கெதிராக எழுந்த குரல்களை அடக்கி ஜனநாயகத்தையும் மனித உரிமை பேணப்படுவதாகவும் காட்டுவதற்காக பிந்துனுவெவ படுகொலை முகாமை அரசு நிறுவியது.

1989ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்த முகாமில் தடுப்புக் காவல் கைதிகளிலுள்ள இளைஞர்களுக்கு புனர்வாழ்வு எனக் கூறிய அரசு புனர் வாழ்வு முகாம் எனக் கூறி தமிழ் இளைஞர்களைத் தடுப்புக்காவலில் வைத்திருந்தது.

சுமார் 32 வயதுடைய 42 இளைஞர்கள் அரசியல் கைதிகள் என்ற போர்வையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தனர். அடிப்படை வசதிகளின்றி இருந்த ஏதும் அறியா அப்பாவிகள் 2000ஆம் ஆண்டு ஒக்டோபர் 25ஆம் திகதி அதிகாலை 2.30 மணியளவில் வாகனங்களில் வந்திறங்கிய சிங்களக் காடையர்கள் கூட்டம் அப்பாவித் தமிழ் இளைஞர்களைக் குதறி வேட்டையாடி இரத்தம் குடித்துள்ளனர்.

பிந்துனுவெவ படுகொலை முகாமைச் சுற்றி பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தவர்கள் சிறிலங்காப் பொலிஸார்தான். இவர்கள் இரத்த வெறியாட்டம் நடந்த போதும் உயிரைக் காப்பாற்றுவதற்காகத் தமிழ் இளைஞர்கள் அபயக் குரல் எழுப்பிய போதெல்லாம் இவர்கள் ஏனோ தானோ என்று உற்சாக மிகுதியில் குதூகலித்துக் கொண்டிருந்தனர்.

ஈற்றில் 27 அப்பாவித் தமிழ் இளைஞர்கள் தமது உயிருக்காகப் போராடி சிங்களக் காடையர் கும்லுடன் சிங்களப் பொலிஸ் படைகளும் இணைந்து நடாத்திய இனவெறி ஆட்டத்தில் குருதி தோய்ந்த நிலையில் உடலங்களாகச் சிதறிக் கிடந்தனர். இவர்களில் 17 பேரின் சடலங்கள் மட்டும் அடையாளம் காணப்பட்டன. எஞ்சிய 10 பேரின் சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை.

குற்றவாளிகள் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்ட போதும் சாட்சிகள் அடையாளம் காட்டத் தவறின என்ற காரணத்தினால் சிறைக்கூடங்களிலிருந்து விடுதலை கிடைத்தது. அப்பாவிகள் குற்றவாளிகளாகச் சிறைக் கூடங்களில் தள்ளப்பட்டு தண்டனையை அனுபவிக்கின்றனர். குற்றவாளிகள் நிரபராதிகளாக கூட்டு வசல் திறந்து விட உலாவுகின்றனர்.

இதுதான் சிறிலங்காவின் சட்டம். தற்போது வரை பிந்துவெவ படுகொலையாளிகள் சட்டத்தின் பிடியில் சிக்கித் தண்டனை பெறவில்லையே என்பது வேதனையை ஏற்படுத்துகின்றது. எனவே இன்றைய தினம் பிந்துனுவெவ படுகொலையின்உயிர் நீத்த 27 தமிழ் உறவுகள் ஆத்ம சாந்திக்காக நாமும் பிராத்திப்போம்.

# யாழ் நூலகத்திற்கு உதவி வழங்க பிரிட்டன் நூலகம் இணக்கம்

(நமதுநிருபர்)

யாழ் நூலகத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உதவி வழங்க பிரிட்டன் நூலகம் இணக்கம் தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் அண்மையில் பிரிட்டன் நூலக அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போதே இந்த இணக்கப்பாடு காணப்பட்டது.

இந்தப் பேச்சுவார்த்தைக்கு முன்னர் யாழ் நூல் நிலைய மற்றும் இலங்கையிலுள்ள பிரிட்டன் கவுன்சில் அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தை நடாத்தியதாக வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ் நூலகத்திற்குத் தேவையான தளபாடங்கள் பற்றி இந்தப் பேச்சுவார்த்தையின் போது கவனம் செலுத்தப்பட்டது. யாழ் நூலகத்தின் புனரமைப்பு நடவடிக்கைகளை ஆராய்வதற்கு விஷேட அமைச்சர் குழுவொன்று ஜனாதிபதி நியமித்துள்ளார்.

# ஆலய உண்டியலை திருடிய இருவர் பொலிசாரின் வலையில் சிக்கினர்

(செ.ஸ்ரீ.கோவிந்தசாமி)

வந்தாறுமூலை மருங்கையடி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய உண்டியலை கடந்த 22ம் திகதி திருடிச் சென்ற இரு திருடர்களும் ஏறாவூர் பொலிஸாரிடம் வகையாக மாட்டிக் கொண்டதுடன் களவாடப்பட்ட உண்டியல் காசுடன் மீட்கப்பட்டுள்ளது.

வததேகமவைச் சேர்ந்த ராஜலிங்கம் தேவராஜ், ஓட்டமாவடி மாஞ்சோலை வீதியைச் சேர்ந்த புகாரி முகமது றியாஸ் ஆகிய இருவருமே இவ்வாறு கோவில் உண்டியலைத் திருடியவர்களாகும்.

மருங்கையடி ஆலயத்தில் உண்டியலைத் திருடிய பின் அதை டைத்து அதிலிருந்த சில்லறைக் காசை ஒரு பையில் எடுத்துக்கொண்டு புகையிரதப் பாதை வழியாக நடந்து சென்று ஏறாவூரை அடைந்த வேளை நள்ளிரவு 12.00 மணிக்கு அங்கு சோதனை சாவடியிலிருந்த பொலிஸார் சந்தேகத்தின் பேரில் இவர்களை விசாரித்த போது திருடிய சம்பவம் தெரியவந்துள்ளது.

மருங்கையடி சித்தி விநாயகர் ஆலயக் குருக்கள் கா.ஜெயகுமார் ஏறாவூர் பொலிஸாரிடம் செய்த முறைப்பாட்டினை அடுத்து சந்தேக நபர்கள் இருவரும் திங்கள் 25ம் திகதி மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் ஏறாவூர் பொலிஸாரினால் ஆஜர் படுத்தப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசாரனையின் போது திருடிய குற்றத்தை ஒப்புக் கொண்ட சந்தேக நபர்கள் உண்டியலை உடைத்த இடத்தைக் காட்டியதுடன் அதிலிருந்த சில்லறைக் காசை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

# றியாத்தில் காயமடைந்த யுவதிகளை தூதரகத்திற்கு அழைத்துச்செல்ல நடவடிக்கை

(நமது நிருபர்)

சவூதியரேபியாவின் றியாத் நகரில் இடம் பெற்ற பஸ் விபத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற யுவதிகளை சவூதிய ரேபியாவிற்கான இலங்கைத் தூதுவர் அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றதாக சவூதியரேபியவிற்கான இலங்கைத் தூதுவர் இப்றாகிம் அன்சார் தெரிவித்தார். இந்த விபத்தில் காயமடைந்த ஏனைய இரு பெண்க ளும் தொடர்ந்து ஒருவார காலத்திற்கு வைத்திய சாலையில் தங்கி சிகிச்சை பெற வேண்டும் என வைத்தியர்கள் தமக்கு அறிவித்துள்ளதாகவும் இப்றாகி அன்சார் தெரிவித்தார்.

# வலயஇடமாற்றசபைக் கூட்டம்

(வேதவகா)

சம்மாந்துறை வலய ஆசிரியர் இடமாற்ற சபைக் கூட்டம் வெள்ளியன்று பிரதிப் கல்விப் பணிப்பாளர் எஸ்.எல்.ஏ.சலாம் தலைமையில் வலயப் பணிமனையில் நடைபெற்றது.

2000ம் ஆண்டு இடமாற்றத்திற்கான விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டன. இஸ்லாமிய ஆசிரியர் சங்கப் பிரதிநிதியாக மாவட்டச் செயலாளர் ஏ.எல்.சாய்வுத்தம்பி (அதிபரி) தமிழ் ஆசிரியர் சங்கப் பிர.திநிதியாக பிரசார செயலாளரும், மாவட்ட செயலாளருமான விரி. சகாதேவராஜா ஆகியோர் தொழிற்சங்கப் பிரமுகர்களாகக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

# அதியுயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள வீடுகளை உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்

## சுரேஸ் எம்.பி படைத் தளபதியிடம் கோரிக்கை

(நமது நிருபர்)

அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் படையினர் வசமுள்ள வீடுகளை உரியவர்களிடம் மீள ஒப்படைக்க வேண்டும் என்று தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக் கோனிடம் நேரில் கோரியுள்ளார்.

பலாலியில் அவரை நேற்றுச் சந்தித்த சமயமே பிரேமச்சந்திரன் இக்கோரிக்கையை விடுத்தார். அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் படையினர் பொது மக்களின் வீடுகளையும் அவர்களது விவசாய நிலங்களையும் வைத்திருப்பதால் அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்கள் அகதிமுகாம்களில் பெரும் கஸ்டங்களை எதிர்நோக்கி வாழவேண்டியுள்ளது.

எனவே அந்த மக்களிடம் வீடுகளை மீளக் கையளிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சுரேஸ் பிரேமச்சந்திரன் தளபதியிடம் கேட்டுக்கொண்டார். போர் நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தபின் அதன் பலனை வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனை பிரதேச மக்களே அனுபவிக்கின்றனர். இந்தப் பிரதேச மக்கள் எந்தவித பயனையும் கடந்த 3 வருடங்களாகப் பெற வில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# தபால் கட்டண அதிகரிப்பு பற்றி அறிவித்தல் எதுவுமில்லை

(நமது நிருபர்)

தபால் கட்டணங்கள் அதிகரிக்கப்படுவது தொடர்பாகச் சுற்றறிக்கை ஏதும் யாழ். பிரதம தபாலகத்துக்குக் கிடைக்கவில்லை என்று தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.தபால் கட்டணங்கள் உயர்வு தொடர்பாக புதிய கட்டணம் நடைமுறைக்கு வரும் தினத்துக்கு ஒருவாரத்துக்கு முன்பே சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்படுவது வழமை.ஆனால், நேற்றுவரை கட்டண உயர்வு குறித்துத் தகவல் ஏதும் கிடைக்கவில்லை என்றும் - அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. முறைப்படியான அறிவிப்பு வெளிவந்த பின்பே புதிய கட்டணங்கள் அமுலுக்கு வரும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



அண்மையில் மட். சந்திவெளி சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் சென். ஜோன் அம்பியுலன்ஸ் முதலுதவி அமைப்பின் அங்குரார்ப்பண நிகழ்வு பாடசாலையின் பிரதி அதிபர் எஸ். முரளிதரன் தலைமையில் நடைபெற்றது. மேடையில் முதலுதவி மட்டக்களப்பு மாவட்ட ஆணையாளர் ஐ. எல். ஜலீல், பாடசாலை ஆசிரியர்கள் அமர்ந்திருப்பதையும், நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களையும் படத்தில் காணலாம்.
படமும் தகவலும்: – செ. ஸ்ரீ. கோவிந்தசாமி)

ஈழநாதம்
மட்டக்களப்பு பதிப்பு மக்கள் நாளிதழ்
Eezhanatham

## அனைத்துலக நூலக தினம் இன்று அம்பாறையில் தேசிய விழா!

(வி.ரி.சகாதேவராஜா)

அனைத்துலக பாடசாலை நூலக தினம் இன்று திங்கட்கிழமை ஆகும்.

கல்வியமைச்சின் பாடசாலை நூலக அபிவிருத்திப் பிரிவு இத்தினத்தையொட்டி நாடெங்கிலுமுள்ள பாடசாலைகளில் பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்துத்துச் செல்லவிருக்கிறது.

இவ்வாண்டின் நூலகத்தின் தொனிப் பொருள் ''கற்றலுக்கும் எழுத்தறிவுக்குமான நூலகங்களை இணைத்தல்" என்பதாகும்.

இத்தினத்தையொட்டி இவ்வாரம் இன்று முதல் 30 திகதிவரை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

தேசியமட்டவிழா இன்று திங்கட்கிழமை அம்பாறை டி.எஸ். சேனாநாயக்கா மகா வித்தியாலயத்தில் நடைபெறும். பிரதம அதிதியாக பிரதிக் கல்வியமைச்சர் மங்களசமரவீர கலந்து சிறப்பிப்பார்.

## தையற் பயிற்சி நெறிக்கு மாதரிடமிருந்து விண்ணப்பம்

(வி.ரி.சகாதேவராஜா)

வடக்கு, கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம் நடாத்திவரும் சம்மாந்துறை விளினயடி மாதர் அபிவிருத்தி நிலையதையற்பயிற்சி நிலையத்தில் 2005ஆம் ஆண்டில் தையல் பயிற்சியைப் பயில்வதற்கு மாதரிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

க.பொ.த. (சா.த) பயின்ற பெண்கள் எதிர்வரும் நவம்பர் மாதம் 10ம் திகதி வரை விண்ணப்பிக்கலாமென சம்மாந்துறை செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஏ.சி. யூசுப்லெவ்வை தெரிவித்தார்.

நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவாகும் 25 மாதர்களுக்கு தையல், மனைவியல், பின்னல், பூ, வேலை, முத்துவேலை, வீட்டுத் தோட்டம், கைவினை, போன்ற துறைகளில் ஒருவருட பயிற்சி வழங்கப்படும்.

நாள் ஒன்றுக்கு ரூபா 50 வீதம் ஊக்குவிப்புப் பணமும் வழங்கப்படுமென்று அதிகாரி யூசுப் லெவ்வை மேலும் தெரிவித்தார். விண்ணப்பிக்க விரும்புவோர் சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் விண்ணப்பங்களை ஒப்படைக்கலாம்.

## ஓய்வு பெற்ற கல்வி அதிகாரிக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிப்பு

(வி.ரி. சகாதேவராசா)

காரைதீவு இ.கி.மி. பாடசாலையில் நடைபெற்ற சர்வதேச ஆசிரியர் தின விழாவில் இளைப்பாறிய, வளர்ந்தோர் கல்வி அதிகாரியும், முன்னாள் கிராமத் தலைவரும், அம்பாறை மாவட்ட முன்னாள் அபிவிருத்திச் சபை உறுப்பினருமான இ. வினாயகமூர்த்தி பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

பாடசாலை அதிபர் கே. வினாயகமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் கல்வி உலகில் 35 வருட கால சேவையாற்றியதுடன் சமூக சேவையாற்றியமைக்காகவும் இப்பாராட்டு கிடைக்கப்பெற்றது.

## உலகில் சமாதானத்தை ஏற்படுத்தும் இலகு ஊடகம் விளையாட்டு

### அதிபர் திருமதி த.பேரின்பராசா

(எஸ்.பி.ஆர்.சலன்)

**உலகில் சமாதானத்தை ஏற்படுத்தக் கூடிய இலகு ஊடகமாக விளையாட்டுத்துறை விளங்குகின்றது. காரணம் விளையாட்டில் ஈடுபடு பவர்கள் விட்டுக் கொடுக்கும் மனப்ப க்குவம், பரஸ்பரம் புரிந்துணர்வு, சகிப்புத்தன்மை, வெற்றி தோல்விகளை சமமாக பேணும் மனப்பக் கும் உள்ளவர்களாக விளங்குகின்ற மையாகும்.**

இவ்வாறு குறிப்பிட்டார். பாண்டிருப்பு மகா வித்தியாலய அதிபர் திருமதி. அ. பேரின்பராசா.

கல்முனை சமாதான அமைப்பின் கீழ் இயங்கும் பாண்டிருப்பு மருதமுனை கிராம மட்ட ஆலோசனைக்குழு நடாத்திய பாலர் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான விளையாட்டு விழா, இக்குழு தலைவரும், ஆசிரியருமான வே. பாலசுப்பிரமணியம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த அதிபர், திருமதி அ.பேரின்பராசா அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

இன்று எம்மத்தியில் உள்ளவர்களில் அனேகமானவர்கள் சமாதானம் பற்றி வாய்ப்பேச்சளவில் மட்டுமே உள்ளனர். செயல் மூலமாக சமாதானத்தை ஏற்படுத்த உழைப்பதை காணமுடியாதை கவலை தரும் விடயமாகும்.

பிஞ்சு உள்ளங்களில் சமாதானத்திற்கான எண்ணக்கருவை விதைக்கின்ற ஒரு நிகழ்வாக இந்த விளையாட்டு விழா அமைந்துள்ளது.

தமிழ், முஸ்லிம் சமூக நல்லுறவுக்காக அயராது உழைத்து வரும் கல்முனை சமாதான அமைப்பின் பணிகளையிட்டு இவ்வேளையில் பாராட்டுத் தெரிவிக்கின்றேன்.

ஒரு பிள்ளையின் மூளை வளர்ச்சியானது மூன்று வயதிற்கும் ஐந்து வயதிற்கும் இடைப்பட்ட காலத்தில் 80வீதம் வளர்ச்சி அடைவதாக உளவியலாளர்கள் கூறுகின்றனர். இக்காலப் பகுதியே ஒரு பிள்ளை முன்பள்ளிக் கல்வியைத் தொடரும் காலமாகவுள்ளது.

இத்தகைய வயதுகளையுடைய பருவத்தில் பிள்ளைகளை முன்பள்ளிக்கு அனுப்பி, தங்களது பிள்ளைகளின் எதிர்கால வாழ்வை வளமுள்ளதாகமாற்ற ஒவ்வொரு பெற்றொரும் விழிப்புடனும், கடமை உணர்வுடனும் கருமாற்ற வேண்டும்.

முன்பள்ளிக் கூடங்களில் விளையாட்டின் மூலமாக நல்லெழுக்கப் பண்புகளும், நீதிக் கதைகளும் புகட்டப்படுகின்றன. இதன் மூலம் எமது சிறார்கள் எதிர் காலத்தில் சிறந்த நற் பிரஜைகளாக மிளிர வழிகாட்டப்படுகின்றது. என்றார்..

இந்நிகழ்வில் பாண்டிருப்பு அல்.மினன் வித்தியாலய அதிபர் யூ.எல். றஹ்மத்துல்லா பேசுகையில்,

கல்முனை சமாதான அமைப்பானது இப்பிரதேசத்தில் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக தமிழ், முஸ்லிம் நல்லுறவை கட்டி வளர்க்க அயராது பாடுபட்டு வருகின்றது. அத்தகைய பணிகளில் ஒன்றாக இந்நிகழ்வு அமைந்துள்ளதையிட்டு எனது பாராட்டுக்களை தெரிவிக்கின்றேன். என்றார்.

இந்நிகழ்வில் கல்முனை சமாதான அமைப்பின் உப தலைவர் ஏ.எல்.எம்.ஏ. மஜீட் (நூலகர் மஜீட்) கல்முனை சமாதான அமைப்பின் இணைச் செயலாளர் ஏ.சீ.ஏ. வாஜித், பொது சுகாதார பரிசோதர்களான ரீ. மகேஸ்வரன் ஜே.எம். நிஜாமுதீன், கல்முனை பிரதேச இளைஞர் சேவை அதிகாரி எம.ரி.எம். ஹாருன், கல்முனை சமாதான அமைப்பின் வெளிக்கள உத்தியோகத்தர் திருமதி கலாதேவி ஜெகதீஸ்வரன் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

**சிறிலங்கா...**

ந்த போது சூரிச் நகரில் வைத்து லண்டன் பி.பி.சி. தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய சூழ் நிலையில் விடுதலைப்புலிகளும் சிறிலங்கா அரசும் சமரசப் பேச்சுவார்த் தையை ஆரம்பிக்க வேண்டும் என வலியுறுத்தப்படும் ஒரு சூழ் நிலையில் சிறிலங்கா அரசு இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவது விரோதப் போக்கையும் சந்தேகத்தையும், குழப்பத்தையும் ஏற்படுத்தும் என்றார்.

ஐரோப்பிய பயணம் குறித்து தமிழ்ச்செல்வன் கருத்து தெரிவிக்கையில் சமாதானப் பேச்சுக்கள் தேக்கமடைந்துள்ளதன் நிலைமையினை தலைப்பீடத்தின் நிலைப்பாடு, சர்வ தேச சமூகத்தின் மத்தியில் பரப்ப ப்படும் தவறான பிரசாரம் போன்ற வற்றின் உண்மைத் தன்மையை சர்வதேச சமூகத்திடம் விளக்கியுள் ளோம்.

சமாதானப் பேச்சுக்கள் மிக விரைவாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதில் சர்வதேச சமூகம் கரிசனை கொண்டுள்ளது. அதிலும் அனுசரணையாளர்களான நோர்வே அதிக அக்கறை கொண்டுள்ளது. எங்களது தலைப்பீடத்தின் அக்கறையும் அதுவே எனினும் ஜனாதிபதியின் நிலைப்பாடு பற்றி தெளிவான போக்கு காணப்படாமையினால் பேச்சுக்கள் ஊடன் ஆரம்பிக்க முடியாத இழுபறி நிலை காணப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை மருத்துவ சிகிச்சை முடித்துக் கொண்டு ஓர் இரு நாட்களில் தாயகம் திரும்புவார் எனக் குறிப்பிட்ட தமிழ்ச்செல்வன்,

எங்கள் இயக்கத்திற்குள் எந்த பிளவுமில்லை மிகவும் கட்டுக்கோப்பாக இறுக்கமாக ஒரே குடும்பம் போல் தலைமைத்துவத்தின் கீழ் உள்ளோம். பொய்யான வதந்திகளே பரப்பப்பட்டதாகவும் கூறினார்.

**துப்பாக்கி...**

ருந்த இரண்டு மோட்டார் சைக்கிள்களையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

மதவாச்சிக்கும் மாகோவிற்குமிடையில் தொடருந்து கொள்ளையில் ஈடுபட்டு வந்த, இந் நால்வரும் நேற்று அனுராதபுரம் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு எதிர் வரும் 8ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

**புதிதாக...**

தயாமோகன் கருத்துத் தெரிவிக்கையில் கடந்த வாரம் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தமிழ் ஆதரவாளர்கள் சுட்டும் கொல்லப்பட்ட சம்பவங்கள் தொடர்பாகவும் ஐயங்கேணி அரசியல் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அண்மித்த பகுதியில் புதிதாக இராணுவ அரண் அமை க்கப்பட்டு வருவது பற்றியும் பேசப்ப ட்டதாகவும் அவர் கூறினார்.

**கதிரொளி...**

வித்தியாலய அதிபர் சி. அகிலேஸ்வரன், அரடித்தீவு விக்னேஸ்வரா மகா வித்தியாலய அதிபர் த. சோமசுந்தரம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் அதிதிகளின் உரை சிறுவர்களுக்கான விளையாட்டு நிகழ்வு முதியோரை கௌரவித்தல் போன்ற பல நிகழ்வுகள் இடம்பெற்றன.

**மருதமுனை...**

மிக அகோரமாகத் தாக்கப்பட்டு முகம் பூமிக்குள் புதைந்த நிலையில் சடலமாகக் காணப்பட்டார். ''இது தம்பியின் சேட் என்பதனை ஊகித்துக் கொண்டு முகத்தை திருப்பிய போது அது எனது தம்பியே" என அடையாளம் காட்டினேன் என்றார் பிரேதபரிசோதனையின் போது வளைந்த கம்பி ஒன்றினால் ஆன ஆயுத்தால் தாக்கப்பட்டே இக்கொலை சம்பவம் இடம் பெற்றிருப்பதாக கூறப்பட்டது.

இருந்தும் இதனோடு தொடர்புடைய சூத்திரதாரிகள் பற்றிய தகவல்கள் வெளியாகவில்லை கல்முனைப் பொலிஸ் மேலதிக விசாரணையினை மேற்கொண்டு வருகின்றனர்.

**சகல...**

கலந்து கொண்டதுடன், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸினதும், முஸ்லிம் காங்கிரஸ் தலைவரதும் பிரதிநிதியாக இந்த விழாவில் பாராளுமன்ற உறுப்பினர் பஷீர் சேகுதாவூத் கலந்து கொண்டதுடன், முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் பைஸால் காசிமும் கலந்து கொண்டார்.

அதேவேளை நுஆ கட்சியின் தவிசாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஐ. உதுமாலெவ்வையும் இந்த விழாவில் கலந்து கொண்டார்.

அமைச்சர் பேரியல் அஷ்ரப் தொடர்ந்து உரையாற்றுகையில் பின்வருமாறு கூறினார்.

''நாம் எந்தக் கட்சியில், எந்த அரசில் இருந்தாலும் முஸ்லிம்களின் பிரச்சினைக்கு தயங்காது முகம் கொடுப்பதுடன், முஸ்லிம்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதை முன்னுரிமைப்படுத்தி செயற்படத் தயங்கோம்.

மறைந்த நம் தலைவர் மர்ஹூம் அஷ்ரப் அவர்கள் முஸ்லிம்கள் ஒரே கொடியின் கீழ் ஒன்று திரள வேண்டும் என்பதற்காகவே முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை ஸ்தாபித்தார்.

ஆனால் அவரது மறைவுக்குப் பின் கட்சிக்குள் பல பிரிவுகள் ஏற்பட்டு ஒற்றுமை குலைந்தமை துரதிஷ்டமானதாகும்.

எனினும் எமக்குள் பிரிவு ஏற்பட்டாலும் முஸ்லிம்களின் பிரச்சினைகள் வரும் போது அனைவரும் ஒன்று படுவோம் என எதிர்பார்த்தாலும் அது கடந்த காலங்களில் நடைபெறவில்லை.

ஆனால் இன்று நிலமை நல்ல நிலைக்கு வந்து கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது.

இன்று இந்த மேடையில் நமது ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டான நிலமை ஏற்பட்டிருந்தாலும் இன்னும் சிலர் இந்த மேடைக்கு வந்திருந்தால் பூரணத்துவம் பெற்றிருக்கும்.

மறைந்த தலைவர் அஷ்ரப்பின் 56வது பிறந்த தினத்தில் நமது ஒற்றுமை தொடர்பாக முன்னேற்றம் காணப்பட்டுள்ள போதிலும், அவரது அடுத்த பிறந்த தினத்திற்கு முதல் சகல முஸ்லிம் அரசியல் தலைவர்களும், அரசியல் பிரமுகர்களும் ஒரே மேடையில் அமர்ந்திருக்கும் நிலை இவ்வாறு அவர் கூறினார்.

முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் பஷீர் சேகு தாவூத் உரையாற்றுகையில்:-

''சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசும், தேசிய ஐக்கிய முன்னணியும் (நுஆ) இணைவது என்பது, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசின் கால்களில் விழுந்து விடு ஒரு சடங்காகப் பார்க்கப்படும் ஓர் ஆபத்தை நாம் எதிர்நோக்குகின்றோம்.

உண்மையில் இந்த நிகழ்வு முஸ்லிம் சமுதாயத்தின் எதிர்கால அரசியல் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கான இணைவே அன்றிப் பதவிகளைப் பெற்றுக் கொள்கின்ற இணைவு அல்ல.

இந்த நிலையில் நமது இரு கட்சிகளதும் தலைவர்கள் கடந்த கால கசப்பான சம்பவங்களை மறந்து பரஸ்பரம் நம்பிக்கையை வளர்த்து முஸ்லிம் சமூகத்திற்காகச் செயல்பட வேண்டும்" என்றார்.

ஊடகத்துறைப் பிரதி அமைச்சர் எம்.எச்.சேகு இஸதீன், பாராளுமன்ற உறுப்பினர் பைஸால் காசிம் ஆகியோரும் உரையாற்றினர்.

**மட்டு.அம்பாறை...**

வெல்லாவெளி, பழுகாமம், கொக்கட்டிச்சோலை, போரதீவு, பட்டிருப்பு, கோட்டைக்கல்லாறு, குருக்கள்மடம், புதுக்குடியிருப்பு, காத்தான்குடி, அரசடித்தீவு, மகிழடித்தீவு, ஆகிய பிரதேசங்களிலும் கல்முனை மின்சார பொறியியல் பிரிவிற்கு உட்பட்ட சொறிக்கல்முனை, சவளக்கடை, அன்னமலை, 15ம் கொலனி ஆகிய பிரதேசங்களிலும் அம்பாறை மின்சாரப் பொறியியலாளர் பிரிவில் நவகம்கொட, வீரகொட, மத்தியமுகாம், 15ம் கொலனி ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதிகளில் அன்றைய தினங்களில் காலை 8.00 தொடக்கம் மாலை 5.00மணிவரையும் மின்வெட்டு அமுலில் இருக்கும் எனவும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை நித்தி பதிப்பகத்தில் 25.10.2004 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.